பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 07 சனிக்கிழமை 23.11.2019 கதிர் 18

**இது ரகசியம் அல்ல!**

2015 ஜனவரியில் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவியேற்றபோது இருந்த அதே நிலைமை இப்போது கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற போதும் உள்ளது.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலுக்காகச் பக்கம் 02 ›››

# கோட்டாவா மஹிந்தவா பாதுகாப்பு அமைச்சர்?

## நீடிக்கின்றது குழப்ப நிலை

கொழும்பு, நவம்பர் 23

புதிய அமைச்சரவை நேற்றுப் பதவியேற்ற போதும் பாதுகாப்பு அமைச்சு யார் வசம் என்பதில் தொடர்ந்தும் குழப்ப நிலை நிலவுவதாகக் கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

அந்த அமைச்சு ஜனாதிபதி கோட்டபாயவிடமா அல்லது பிரதமர் மஹிந்தவிடமா என்பது தொடர்பிலேயே குழப்ப நிலைமை நீடிக்கின்றது. பக்கம் 02 ›››



## ஐ.தே.கட்சிக்குள் இருந்துகொண்டு விமர்சிப்போர் மீது கடும் நடவடிக்கை

### ரணில் நேற்று காட்டத்துடன் எச்சரிக்கை



கொழும்பு,நவ.23

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்துகொண்டு கட்சியின் மீது குற்றம் சுமத்துபவர்கள் மீது விசாரணை நடத்திக் கடும் நடவடிக்கை எடுக்கப் போகிறார் என அக்கட்சியின் தலைவர் ரணில் பக்கம் 03 ›››

## அமைச்சுப் பொறுப்புகளை ஏற்றார் டக்ளஸ் தேவானந்தா



கொழும்பு, நவ. 23

மீன்பிடி நீரியல் வளத்துறை அமைச்சுப் பொறுப்பை நேற்றுப் பிற்பகல்மாளிகாவத்தை பக்கம் 03 ›››

## 16 பேர் கொண்ட புதிய அமைச்சரவை கோட்டா முன்னிலையில் பதவியேற்பு



கொழும்பு, நவ. 23

புதிய அமைச்சர்கள் நேற்று ஜனாதிபதிசெயலகத்தில் பதவிப் பிரமாணம்செய்துகொண்டனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான இடைக்கால பக்கம் 03 ›››

## கோட்டாவை நேற்று நேரில் வாழ்த்தினார் அமெ. தூதுவர்



கொழும்பு, நவ. 23

அமெரிக்க மற்றும் ஜப்பான் தூதுவர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். பக்கம் 03 ›››

## மன்னார் நகர பிதாவுக்கு எச்சரிக்கை செய்து கடிதம்

மன்னார், நவ. 23

மாவீரர் குடும்பங்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை உடனடியாக நிறுத்துமாறு எச்சரிக்கைவிடுத்து,தனக்கு கடிதமொன்று அனுப்பிவைக் பக்கம் 03 ›››

## வடக்கு மாகாண ஆசிரியர்களின் இடமாற்றப் பட்டியல் வெளியீடு

### 221 பேருக்கு மட்டுமே மாற்றம் 419 பேரின் விண்ணப்பம் நிராகரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 23

வடக்குமாகாணப்பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான 2020ஆம் கல்வி ஆண்டில் இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் பட்டியல் மாகாணக்கல்வித்திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி வடக்கு மாகாணத்தில் 221 பக்கம் 03 ›››

## ஜனாதிபதி கோட்டாவுக்கு ரஷ்ய ஜனாதிபதி வாழ்த்து

கொழும்பு, நவ. 23

நாட்டின் 7ஆவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் வாழ்த்துக்களைத் பக்கம் 03 ›››

## கொழும்பு மேயருடன் முறுகிறார் கோட்டா

### சந்தித்துப் பேசத் திடீர் அழைப்பு

கொழும்பு, நவ. 23

கொழும்புமாநகரின் கழிவகற்றல் மற்றும் மாநகரசபையின்நிர்வாகச் சீர்கேடு தொடர்பில் கிடைத்தபலமுறைப்பாடுகளையடுத்துஅதுதொடர்பில் பக்கம் 03 ›››

## தமிழ் மக்களின் வாக்குகளால் இனத் துவேசத்துக்கு வேட்டு!

### அடைக்கலநாதன் எம்.பி. சுட்டிக்காட்டு



வவுனியா, நவ. 23

தமிழர்கள் இனத்துவேசம் கொண்டவர்கள் அல்லர் என்பதை நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் நிரூபித்துள்ளார்கள் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். பக்கம் 03 ›››

## அமைச்சுப் பொறுப்பு எனக்கு வேண்டாம்!

### கம்மன்பில ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு, நவ. 23

குறுகிய கால அரசில் தனக்கு அமைச்சுப்பதவி வேண்டாம் என ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார் பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில.

இதுதொடர்பில்அவர் ஜனாதி பக்கம் 03 ›››

## யாழ்.மாநகரசபை பட்ஜெட்டுக்கு முன்னணி ஆதரவு கொடுக்காது

### பார்த்திபன் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ்ப்பாணம்மாநகர சபையின் 2020 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவுதெரிவிக்கப் போவதில்லை எனதமிழ்த்தேசியமக்கள் முன்ன பக்கம் 03 ›››

# வாழைச்சேனையில் சுழல் காற்றினால் ஒருவர் உயிரிழப்பு!பல வீடுகள் சேதம்!





மட்டக்களப்பு, வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கறுவாக்கேணி, சுங்கான்கேணிப் பகுதியில் வீசிய சுழல் காற்றினால் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அத்துடன் அந்தப் பகுதிகளில் நேற்று வெள்ளிக்கிழமை காலை ஏற்பட்ட சுழல் காற்றினால் பல வீடுகள் சேதமடைந்துள்ளன என வாழைச்சேனை பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம் தெரிவித்துள்ளார்.

கறுவாக்கேணியில் அமைந்துள்ள தனியார் ஒருவரின் கடைத் தொகுதியை பராமரிக்கும், சுங்கான்கேணியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை ஆறுமுகம் (வயது 62) என்பரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

கடைத் தொகுதியைப் பராமரிக்கும் இவருக்கு ஒதுக்கப்பட்ட வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த போது வீட்டின் சுவர் பகுதி அவரின் மேல் விழுந்தமையாலேயே இந்த உயிரிழப்பு இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் மட்டக்களப்பு மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினரின் விசாரணையின் பின்னர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறினர்.(ஐ)

# அத்துமீறிய மீன்பிடிப்புக்காகத் தடுக்கப்பட்ட இந்திய இழுவைப் படகு விடுவிக்கப்பட்டது!

## மன்னார் நீதிமன்றம் உத்தரவு

மன்னார்,நவ.23

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டதாக தெரிவித்து கைப்பற்றப்பட்டிருந்த இந்திய இழுவைப்படகு ஒன்று மன்னார் நீதிமன்றில் இடம்பெற்ற வழக்கின் முடிவில் விடுவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 28.07.2019 அன்று இந்திய இழுவைப்படகு ஒன்றில் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டனர் எனக் கூறப்படும் 7 இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைதுசெய்தமையுடன் அந்த இழுவைப் படகையும் கைப்பற்றினர்.

பின்னர் இந்திய மீனவர்கள் 7 பேரையும் கடற்படையினர் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.

தலைமன்னார் பொலிஸார் அவர்களை மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தினர்.

இவர்கள் மன்னார் நீதவான் நீதிமன்றின் கட்டளைக்கு அமைவாக 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். 08.08.2019 அன்று மன்னார் நீதவான் நீதிமன்றில் நடைபெற்ற வழக்கு விசாரணையில் மீனவர்கள் தங்கள் குற்றங்களை ஒப்புக் கொண்டனர்.

இதைத் தொடர்ந்து மன்னார் நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராஜா இவர்களுக்கு தண்டப் பணம் செலுத்த கட்டளை பிறப்பித்தமையுடன் ஒத்திவைக்கப்பட்ட சிறைதண்டனையும் விதித்து விடுவித்தார்.

அத்துடன் விடுதலை செய்யப்பட்ட 7 இந்திய மீனவர்களையும் மீரியான முகாம் ஊடாக அவர்களின் தாய் நாட்டுக்கு அனுப்பி வைக்கும் படியும் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

மேலும் கைப்பற்றப்பட்டு கடற்படையினரின் பாதுகாப்பில் இருந்து வந்த இயந்திர இழுவைப் படகு சம்பந்தமாக படகின் உரிமையாளரை விசாரணைக்காக முன்னிலையாகுமாறு யாழ் இந்தியத் தூதரக அதிகாரியின் ஊடாக அவர் கட்டளைப் பிறப்பித்திருந்தார்.

இவ்கட்டளையைத்தொடர்ந்து 17.10.2019 அன்று இழுவைப் படகு உரிமையாளர் மன்னார் நீதவான் நீதிமன்றில் முன்னிலையானார்.

இதைத் தொடர்ந்து வழக்கு விசாரணை துரிதமாக இடம்பெற்று கடந்த புதன்கிழமை தீர்ப்பு வழங்கப்பட்டது.

படகை விடுவித்து அதனை உரிமையாளரிடம் ஒப்படைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இவ்வழக்கில் பிரதிவாதிக்காக மன்றில் மன்னார் சிரேஷ்ட சட்டத்தரணி பா.டெனிஸ்வரன் மற்றும் செ.டினேசன் ஆகியோர் முன்னிலையாகினர்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடும் இந்திய படகுகள் அரசஉடமையாக்கப்படும் என்ற அர சின் அறிவித்தலுக்குப் பின் முதல் முறையாக நீதிமன்றினால் விடுவிக்கப்பட்ட இந்தியப் படகு இதுவே எனவும் தெரிவிக்கப்படுகின்றது

# கல்வித்துறையை மேலும் வலுப்படுத்த வேண்டும்

## புதிய கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 23

கல்வித்துறையை வலுப்படுத்த வேண்டியது பிரதானமாகும் என புதிய கல்வி அமைச்சர் டலஸ் அழகபெரும தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் கல்வித் துறையை வலுப்படுத்துவது பிரதானமாகும் என அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் கல்வி அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்து கொண்ட பின்னர், கல்வி அமைச்சில் நேற்று உத்தியோகபூர்வமாக தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்– ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வரவு–செலவுத் திட்டத்தில் தேசிய பாதுகாப்புக்கு அடுத்ததாக கல்விக்கே அதிகளவு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரம், அவர் நிறக்கண்ணாடி அணிந்து அரசியல் நிறங்களுக்கு ஏற்றாற்போல் தமது திட்டங்களை ஒரு போதும் முன்னெடுப்பவர் அல்லர். ஆகவே அவரது திட்டங்களுக்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

அத்துடன், கட்சி, இன, மத பேதமின்றி அனைவருடனும் இணைந்து சேவையாற்றுவதற்கு நான் தயாராக இருக்கிறேன் – என்றார். (ஐ)

## கோட்டாவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதி, புத்தசாசனம், நகர அபிவிருத்தி மற்றும் ஏனைய அமைச்சுக்களுடன் பாதுகாப்பு அமைச்சும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடமே ஒதுக்கப்பட்டுள்ளதாக முதலில் வெளியான செய்திகள் தெரிவித்தன.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வமுகப் புத்தகத்தில் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட அமைச்சுகளின் ஒதுக்கீட்டில் பிரதமருக்கு பாதுகாப்பு, பொது பந்தோபஸ்து, சட்டம், ஒழுங்கு அமைச்சும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், அந்த முகப்புத்தகத்தின் சிங்கள வாசகத்தில் பிரதமருக்கு ஒதுக்கப்பட்ட அமைச்சுகளில் பாதுகாப்பு அமைச்சின் விவரம் நீக்கப்பட்டிருந்தது.

இதேசமயம் அமைச்சர்களின் விவரங்களைக் குறிப்பிட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பேச்சாளர் மிலிந்த ராஜபக்ஷ நேற்றுக்காலை வெளியிட்ட 'ட்டுவீட்' செய்தியில் பிரதமர் மஹிந்தவுக்கு பாதுகாப்பு அமைச்சு ஒதுக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது..

ஆனால் இதேசமயம், ஜனாதிபதி செயலகத்தின் பேச்சாளர் ஒருவர் மேற்படி பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியின் கீழ் உள்ளது என்று தெரிவித்திருக்கின்றார்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின்படி எந்த அமைச்சையும் புதிய ஜனாதிபதி தம்முடன் வைத்திருக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் அந்த அமைச்சு இப்போது யார்வசம் உள்ளது என்பது தொடர்பில் குழப்ப நிலைமை தொடர்ந்து நீடிக்கின்றது. (உ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சற்றுக்காலம் காத்திருக்க வேண்டிய கட்டாயம்தான் அது. அப்போது நூறு நாள் அரசாங்கம் அமைத்த மாதிரி இப்போதும் சுமார் நூறு நாள் அரசாங்கம் அமைக்க வேண்டிய சூழல் கோட்டாபயவுக்கும்.

தற்போதைய நாடாளுமன்றத்தை இப்போது கலைப்பதாயின் அதற்கான தீர்மானம் ஒன்றை நாடாளுமன்றமே மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற வேண்டும். அதற்குப் பெரும்பாலும் வாய்ப்புகள் – சந்தர்ப்பங்கள் – குறைவு தான்.

இப்போதைய நாடாளுமன்றத்தின் நான்கரை ஆண்டுகள் பதவிக்காலம் எதிர்வரும் பெப்ரவரி மூன்றாம் வாரத்தில்தான் முடிகின்றது. அதற்குப் பின்னர் தான் இந்த நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வரும்.

அப்படிப் பார்த்தல், பெப்ரவரி இறுதிவரை இந்த நாடாளுமன்றத்தை வைத்தே அரசை முன்னெடுக்க வேண்டிய இக்கட்டு புதிய ஜனாதிபதிக்கு.

அதன்படி, பெப்ரவரி கடைசி வரை–அடுத்த நூறு நாள்களுக்கு – இடைக்கால அரசை நிறுவியிருக்கின்றார் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

இடைக்கால அரசு என்பதால் தமது சகோதரர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் 16 பேர் கொண்ட ஓர் அமைச்சரவையை அவர் நியமித்திருக்கின்றார்.

இலங்கையின் அரசியல் சரித்திரத்தில் அண்மைக்காலத்தில் இப்படி ஆக 16 பேர் அமைச்சரவை அமைந்தது இதுதான் முதற்தடவை.

பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு அமைச்சர் பதவி வழங்க வேண்டும். பங்காளிக் கட்சியான சு.கவுக்கு 3 அமைச்சுக்கள் வழங்க வேண்டும். பொது ஜன பெரமுனவில் இருக்கும் மூத்த பிரமுகர்களுக்கு அமைச்சுப் பதவி கொடுக்க வேண் டும்.

இவ்வளவையும் 16 பேர் கொண்ட அமைச்சரவைக்குள் அடக்குவது என்பது மிகமிகக் கஷ்டமான விவகாரம்.

புதிய ஜனாதிபதி கோட்டாபயவும் அவர் சகோதரர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் எவ்வளவோ கஷ்டப்பட்டு ஆக 16 பேர் கொண்ட அமைச்சரவைப் பெயரிட்டு விட்டார்கள்.

கட்சித் தலைவர்கள் என்ற முறையில் தினேஷ் குணவர்த்தனா, டக்ளஸ் தேவானந்தா, விமல் வீரவன்ஸ, ஆறுமுகம் தொண்டமான் என நால்வருக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது. சுதந்திரக் கட்சியிலும் நிமால் ஸ்ரீபால டி சில்வா உட்பட மூவருக்கு அமைச்சுப் பதவி கிட்டியுள்ளது.

இப்போது பொதுஜனபெரமுன தலைமையிலான கூட்டில் முன்னாள் முழு அமைச்சர்கள் 38 பேர் உள்ளனர். அவர்களில் ஆக 16 பேருக்கு மட்டுமே அமைச்சுப் பதவி கொடுப்பது என்றால் அதற்கான தெரிவு மிகக் கஷ்டம் தான்.

புதிய அரசின் கூட்டின் பங்காளிக் கட்சியான பிவித்ரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில்ல இந்த நெருக்கடியை உணர்ந்து கொண்டு இந்த இடைக்கால அரசில் தமக்கு அமைச்சர் பதவி வேண்டாம் என்று ஒதுங்கிக் கொண்டு விட்டார்.

மற்றொரு பங்காளிக் கட்சியின் தலைவரான வாசுதேவ நாணயக்காரவுக்கு சபாநாயகர் பதவி தரப்படும் என்று சமாதானம் கூறப்பட்டிருக்கின்றது.

ஆனால், அதில் ஒரு நெருக்கடி உள்ளது. இப்போது பதவியில் இருக்கும் சபாநாயகர் கரு ஜயசூரியவைப் பதவியில் இருந்து இறக்கினால்தான் அந்த இடத்துக்கு வாசுதேவவை இருத்தலாம்.

கரு ஜயசூரிய தாமாக சபாநாயகர் பதவியைத் துறக்கத் தயாரிலையாம்.

அப்படியானால் அவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்து அவரைப் பதவியில் இருந்து தோற்கடித்து, அதிலிருந்து இறக்க வேண்டும்.

ஏற்கனவே இந்த இடைக்கால அரசுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கின்றதா என்பது சந்தேகமே. அதன் நாடாளுமன்றப் பெரும்பான்மை குறித்து எந்தத் தரப்பும் கேள்வி எழுப்பாதமையால் இதுவரை சிக்கலின்றி அது நகருகின்றது.

தேவையில்லாமல் சபாநாயகர் கருஜயசூரியவைப் பதவியில் இருந்து அகற்றுவதற்கு ஒரு பிரேரணையைக் கொண்டு வந்து, அது நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசு மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானமாக அது அர்த்தப்படுத்தப்பட்டுவிடும் ஆபத்து உள்ளது.

அதனால், சபாநாயகர் விடயத்தில் என்ன செய்வது என்று தெரியாமல் தங்களுக்குள் வாதப் பிரதிவாதத்தில் ஈடுபட்டிருக்கின்றது புதிய அரசுத் தரப்பு.

தமிழக் கூட்டமைப்பும், முஸ்லிம் கட்சிகளும், தமிழ் முற்போக்கு முன்னணியும், சபாநாயகருக்கு எதிரான பிரேரணையை நிச்சயம் எதிர்க்கும் என்கின்றன அரசியல் வட்டாரங்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியில் அதிகம் மரியாதைக்குரிய தலைவரான கரு ஜயசூரியவுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுப்பதற்கு ஐ.தே.கட்சி எம்.பிக்களும் பெரும்பாலும் தயங்குவர் என்பதும் தெரிந்ததே.

ஆகவே கரு ஜயசூரியவுக்கு எதிரான பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து மூக்குடைபடுவதா என்ற குழப்பத்திலும் ஆளும் தரப்பு உள்ளது.

எனினும் பிரதி அமைச்சர்கள் நியமனத்தின் போது ஐ.தே.க தரப்பில் கணிசமான எம்.பிக்களை வளைத்துப் போட்டு, நாடாளுமன்றத்தில் தேவையான பெரும்பான்மையை எட்டுவதற்கு முயற்சிக்கலாமா என்ற ஆலோசனையையும் ஆளும் தரப்பில் நடப்பதாகத் தெரிகின்றது.

எது, எப்படி என்றாலும் இந்த உத்தேச நூறு நாள் ஆட்சியின் பிரதிபலிப்புகள் அடுத்த பொதுத் தேர்தலில் எதிரொலிக்கும் என்பதால் அது குறித்து ராஜபக்ஷக்கள் மிகவும் கவனமாக இருக்கிறார்கள் எனக் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

எவ்வாறாயினும், இடைக்கால அரசின் நிர்வாகமாவது நல்லாட்சியாக அமைந்தால் நல்லது. நடக்குமா? பார்ப்போம்...!

–மின்னல்–

## 16 பேர் கொண்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைச்சரவைக்கான உறுப்பினர்கள் 15 பேர் தமக்கான அமைச்சரவை நியமனக் கடிதங்களை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

1. மஹிந்த ராஜபக்ஷ – நிதி, பொருளாதார அலுவல்கள், கொள்கை அபிவிருத்தி, புத்த சாசனம், கலாசாரம், நீர்வழங்கல் மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு வசதிகள் அமைச்சர்

2. நிமல் சிறிபால டி சில்வா – நீதி, மனித உரிமை மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர்

3. ஆறுமுகன் தொண்டமான் – தோட்ட உட்கட்டமைப்பு, சமூக வலுவூட்டல் அமைச்சர்

4. தினேஷ் குணவர்தன – வெளிநாட்டு உறவுகள், திறன் அபிவிருத்தி, தொழிற்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர்

5. டக்ளஸ் தேவானந்தா – மீன்பிடி, நீரியல் வள அமைச்சர்

6. பவித்ராதேவி வன்னியாரச்சி – மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள், சமூக பாதுகாப்பு, சுகாதார, சுதேச மருத்துவத்துறை அமைச்சர்

7. பந்துல குணவர்தன – தகவல், தொடர்பாடல் தொழிநுட்பம், உயர்கல்வி, தொழிநுட்ப புத்தாக்க அமைச்சர்

8. ஜனக பண்டார தென்னக்கோன் – பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர்

9. சமல் ராஜபக்ஷ – மகாவலி அபிவிருத்தி, விவசாயம், நீர்ப்பாசனம், கிராமிய பொருளாதார அபிவிருத்தி, உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு, நுகர்வோர் நலன்கள் அமைச்சர்

10. டலஸ் அழகப்பெரும – கல்வி, விளையாட்டுத்துறை, இளைஞர் அலுவல்கள் அமைச்சர்

11. ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ – வீதி, பெருந்தெருக்கள் துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சர்

12. விமல் வீரவன்ஸ – சிறிய மற்றும் நடுத்தர தொழிற்துறை, தொழில் முயற்சி அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சர்

13. மஹிந்த அமரவீர – பயணிகள் போக்குவரத்து, மின்சக்தி, சக்திவலு அமைச்சர்

14. எஸ்.எம்.சந்திரசேன – சுற்றாடல், வனஜீவராசிகள், காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர்

15. ரமேஷ் பத்திரன – பெருந்தோட்டத் துறை, ஏற்றுமதி விவசாயம் அமைச்சர்

16. பிரசன்ன ரணதுங்க – கைத்தொழில் ஏற்றுமதி, முதலீட்டு ஊக்குவிப்பு, சுற்றுலா மற்றும் விமான சேவைகள் அமைச்சர். (ஐ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்துள்ளார்.

'நீங்கள் ஒவ்வொரு வெற்றிகளையும், நல்ல ஆரோக்கியத்தையும், செழிப்பையும் பெற வாழ்த்துகிறேன்' என அவர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், கோட்டாபயவின் ஆட்சியின் கீழ் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உரையாடல் மற்றும் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு பலப்படுத்தப்படும் என்பதில் அவர் புடின் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மேலும், இது பிராந்திய ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்த உதவும் எனவும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கப்பட்டுள்ளதாக மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தெரிவித்துள்ளார்.

'இலங்கையன்' எனும் பெயரில் இந்தக் கடிதம், நேற்றுத் தனக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அந்தக் கடிதத்தில், 'மன்னார் நகர சபையில் தற்போது மாவீரர் மற்றும் போராளிகளின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு அதிகளவான வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன என அறிகின்றோம். மேலும் சிறுவர் பூங்கா உட்பட பல பொது இடங்களில் புலிகளின் தேசிய நிறமான சிவப்பு, மஞ்சள் பூசப்பட்டுள்ளது. மன்னாரில் மக்கள் வங்கிக்கு பின்புறமாக தற்போது கட்டப்பட்டுவரும் கடைகளில் பல கடைகள் மாவீரர் குடும்பங்களுக்கு ஒதுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான செயல்கள் இனியும் தொடரக் கூடாது. மாவீரர் மற்றும் போராளிக் குடும்பங்களுக்குச் சலுகைகள் மற்றும் அன்பளிப்புக்கள் முன்னுரிமைகள் அளிக்கப்படக்கூடாது. நிறுத்தப்படவேண்டும். உங்களுக்குரிய அரச கடமையை மட்டும் சரியாகச் செய்யவும். உங்கள் அனைவரையும் பற்றி தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன' எனக் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்விடயம் தொடர்பாக மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவின்சன் தெரிவிக்கையில் – மக்களுக்கான பணிகளை நாங்கள் நேர்மையாகவும் கண்ணியமாகவும் மேற்கொண்டு வருகின்றோம். நாங்கள் எந்த வித அச்சுறுத்தல்களுக்கும் அடி பணியப் போவதில்லை. எத்தகைய தடைகள் வந்தாலும் எமது இலக்கும், எமது பணிகளும் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் – என்றார். (ஐ)

## யாழ். மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ணியின் உறுப்பினர் வரதராஜ பார்த்திபன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

2019ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட யாழ்ப்பாண மாநகர சபையின் பாதீட்டில் பல விடயங்கள் இன்னமும் கிடப்பில் கிடக்கின்றன. அந்த விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு யாழ்ப்பாண மாநகர சபையின் நிர்வாகம் தவறிவிட்டது.

அது அவ்வாறு இருக்கையில் 2020ஆம் ஆண்டுக்கான பாதீடு பரிசீலனை செய்வதற்கோ அல்லது அதற்கு ஆதரவளிப்பதற்கோ தமிழ் தேசிய மக்கள் முன்னணியை தயாராக இல்லை.

எந்த ஒரு புதிய அரசு வந்தாலும் தமிழ் மக்களுக்கு எந்த ஒரு விமோசனமும் கிடைக்கப்போவதில்லை. தென்னிலங்கைக்கு ஆட்சி பீடமேறும் அரசானது தமிழினத்தின் தேசிய உணர்வினை நீர்த்துபோக செய்வதற்கான செயற்பாட்டில் ஈடுபடுவார்களே ஒழிய தமிழ் மக்களுக்கு எந்த ஒரு விடயத்தையும் செய்யப் போவதில்லை.

கடந்த கால அனுபவங்கள் மூலம் அதுதென்படுகின்றது. எனவே ஆட்சி மாற்றத்தின் மூலம் எந்த ஒரு விமோசனமும் தமிழ் மக்களுக்கு கிடைக்கப் போவதில்லை – என்றார். (ஐ-07)

# கட்டுபெத்த, அங்குலானை சந்தியில் இரசாயனத் தொழிற்சாலையில் தீ!

கொழும்பு, கட்டுபெத்த, அங்குலானை சந்தி, மொரட்டுவைப் பிரதேசத்தில் அமைந்துள்ள இரசாயனத் தொழிற்சாலையொன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 3.15 மணியளவில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டதாக மொரடுவை பொலிஸார் தெரிவித்தனர்.

தீயினை கட்டுப்படுத்துவதற்காக 10 தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தொழிற்சாலைக் கட்டம் நான்கு மாடிகளை கொண்டது என பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேசவாசிகள், பொலிஸார், தெஹிவளை, மொரட்டுவை,



மருதானை மற்றும் கல்கிஸ்ஸ தீயணைப்புப் பிரிவினர் இணைந்து தீயைக் கட்டுப்படுத்தினர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மொரட்டுவை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# திருமலையில் குழு மோதல் இருவர் காயம்; 6 பேர் கைது

திருகோணமலை,நவ.23

திருகோணமலையில் இரண்டு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலின் போது இருவர் பலத்த காயங்களுக்குள்ளாகினர். சம்பவத்துடன் தொடர்புடைய ஆறு பேரை இம்மாதம் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிவான் எம்.எச்.எம்.ஹம்ஸ நேற்று உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் திருகோணமலை, சமுத்திரகம பகுதியைச் சேர்ந்த 31, 19, 21, மற்றும் 20 வயதுடைய ஆறு பேரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களுக்கும் மற்றொரு குழுவுக்கும் இடையில் மீன் பிடி தொடர்பில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் கைகலப்பாக மாறி ஒருவருகொருவர் தாக்கியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை கொட்டுவ வீதி பகுதியைச் சேர்ந்த நிசான் குரூஸ் வயது 25, மற்றும் பிரதீப் குமார வயது 23 என்ற இரு நபர்கள் காயங்களுக்குள்ளான நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் திருகோணமலைத் தலைமையக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய ஆறு பேரை கைது செய்து திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்திய போதே அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

## அமைச்சுப் பொறுப்புக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யிலுள்ள அமைச்சு அலுவலகத்துக்கு சென்று ஏற்றார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

அமைச்சின் அதிகாரிகளுடன் அவர் பின்னர் ஆலோசனைகளை நடத்தி உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டிய பணிகள் குறித்தும் ஆராய்ந்தார் என அவரது ஊடகப் பிரிவு தெரிவித்தது. (ஐ)

## வடக்கு மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதுடன் 419 ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இந்த இடமாற்றமானது தரம் ஒன்று தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இடமாற்றம் எனவும், 2020ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி நடைமுறைக்கு வரும் என்றும் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் க.பொ.த உயர்தரத்துக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு 2020ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இடமாற்றம் நடைமுறைக்கு வரும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த இடமாற்றத்தில் ஆட்சேபனைகள் இருப்பின் வரும் டிசெம்பர் 6ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படவேண்டும். மேன்முறையீடு தொடர்பான இறுதித் தீர்மானம் வரும் டிசெம்பர் 20ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் கூறியுள்ளார்.

வெற்றிடம் இல்லாமை காரணமாக நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பொருத்தமான வெற்றிடம் உள்ள கல்வி வலயத்தை விண்ணப்பிக்கும் போது பரிசீலிக்கப்படும் என்றும் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## தமிழ் மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வவுனியாவில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

இந்த நாட்டிலே இரண்டு சமூகங்கள் வெவ்வேறு நிலைப்பாட்டை கொண்டவைகளாக இருக்கின்றன.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு எமது தேசிய இனம் வாக்களித்தது. அதேநேரத்தில் மற்றொரு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு சிங்கள தேசம் வாக்களித்தது.

எங்கள் தேசத்தில் நடைபெற்ற அத்தனை பிரச்சினைகளையும் மக்கள் மறக்கமுடியாத வடுக்களாக இன்றும் சுமந்துகொண்டிருப்பதை இந்தத் தேர்தலில் உறுதி செய்துள்ளார்கள்.

ஆகவே, ஆட்சியாளர்கள் நிச்சயமாக இதற்குப் பதில் சொல்ல வேண்டும். பதில் சொல்லியே ஆவார்கள். எனவே, தேர்தல் முடிந்த இந்தச் சூழலில் எமது மக்கள் ஒரு அச்சத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் அச்சப்படத் தேவையில்லை.

எவ்வளவு பிரச்சினைகளைச் சந்தித்தவர்கள் நாங்கள். எனவே அந்த நிலைக்குச் செல்லும் அளவுக்கு எதுவும் ஆகாது. நாங்கள் உங்கள் பின்னால் நிற்கிறோம் – என்றார். (ஐ)

## ஐ.தே.கட்சிக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விக்ரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாஸவை வெற்றிப் பெறச் செய்யும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவில்லையென முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை தான் முழுமையாக நிராகரிக்கிறார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நிதி நடவடிக்கைகளை நாம் பொறுப்பேற்கவில்லை. அந்தக் குற்றச்சாட்டையும் நான் நிராகரிக்கின்றேன் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கட்சியின் சிறிகொத்த தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

## அமைச்சுப் பொறுப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் –

அமைச்சுப் பொறுப்புக்கள் கட்சியின் முக்கியமான தலைவர்களுக்கு வழங்கப்படவேண்டும். ஏற்கனவே 10 பேர் கொண்ட அமைச்சரவையை நீங்கள் நியமிக்க இருந்தாலும் அது இப்போது 15 பேர்வரை நீண்டுள்ளது. எனவே அமைச்சரவையை நியமிப்பதில் உங்களுக்குள்ள சங்கடத்தை கருத்திற்கொண்டு அமைச்சுப் பொறுப்பு எதனையும் எடுக்காதிருக்க தீர்மானித்து உங்களுக்கு ஒத்துழைப்பை வழங்குகிறேன். – என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## கோட்டாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தச் சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது, புதிய ஜனாதிபதிக்கு தூதுவர்கள் தமது வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ், அமெரிக்கத் தூதுவராலயச் செயற்பாடுகளுக்கான பிரதித் தலைவர் மார்ட்டின் கெலி, அரசியல் செயற்பாடுகளுக்கான தலைவர் அன்ரனி ரென்சுலி ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டதுடன், இரு தரப்பினரும் இதன்போது சுமூக கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதனிடையே இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் சுகியாமா அகிரா, இலங்கைக்கான ஜப்பான் தூதுவராலயச் செயற்பாடுகளுக்கான பிரதித் தலைவர் டொஷிஹிரோ கிதமுரா மற்றும் பிரதிச் செயலாளர் தகேஷி ஒகி ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். (ஐ)

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடும் நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

இதற்காக அவசர சந்திப்புக்கு வருமாறு கொழும்பு மாநகர மேயர் ரோஸி சேனாநாயக்காவுக்கு ஜனாதிபதியிடமிருந்து விசேட பணிப்புரை சென்றிருப்பதாக அறியமுடிந்தது.

ஏற்கனவே நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள கொழும்பு மாநகர சபை, நிர்வாகச் சீர்கேடுகளால் மேலும் பல இழப்புகளைச் சந்தித்து வருவதாகவும், கழிவகற்றல் பணி முறையாக நடக்காத காரணத்தால் மாநகரத்தின் அழகும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் மேயரிடமிருந்து முறையான பதில் கிடைக்காத பட்சத்தில் விசேட ஆணையாளர் ஒருவரை நியமித்து மாநகர நிர்வாகப் பணிகளை மேற்கொள்ள ஜனாதிபதி உத்தேசித்திருக்கிறார் என அறியமுடிந்தது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## இந்திய அணுகுமுறைப் போக்கின் மாற்றத்தைக் கொழும்பு உணருமா?

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் மூலம் இலங்கைத் தீவின் சிறுபான்மையினரும், பெரும்பான்மையினரான பௌத்த, சிங்கள மக்களும் துருவமயப்பட்டு நிற்கின்றார்கள் என்பது துல்லியமாகத் துலாம்பரமாகி உள்ளது.

அது மட்டுமல்ல. பௌத்த, சிங்கள வாக்கு வங்கியை மட்டும் நம்பி இந்தத் தீவில் ஆட்சிப் பீடம் ஏற முடியும் என்பதையும்–

சிறுபான்மையினரை முற்றாகப் புறம் ஒதுக்கி விட்டு இந்தத் தேசத்தின் நிர்வாக ஆட்சியைக் கைப்பற்ற முடியும் என்பதையும் –

இந்தத் தேர்தல் ஐயந்திரிபற நிரூபித்து நிற்கின்றது.

இந்த நிரூபணம், இலங்கைத் தீவில் சிறுபான்மையினரின் இருப்புக்கும், தனித்துவ அடையாளங்களைப் பேணியபடி வாழ்வதற்கும் கேள்விக் குறியை எழுப்பியிருக்கின்றது என்பதும் வெளிப்படையானது.

இந்தப் பின்புலத்தில்தான் அயல் தேசமான இந்தியாவின் மோடியின் அதிகார பீடம் இலங்கை தொடர்பில் தனது பிரதிபலிப்பலிப்புக்களை வெகுவேகமாகக் காட்டியிருக்கின்றது.

புதிய ஜனாதிபதியாகக் கோட்டாபய ராஜபக்ஷவைத் தேர்வு செய்த தேர்தலின் முடிவுகள் வெளியாகும் கையோடே புதிய ஜனாதிபதிக்கு வாழ்த்துத் தெரிவித்த இந்தியப் பிரதமர் மோடி, புதிய ஜனாதிபதியைப் புதுடில்லிக்கு வருமாறும் அழைப்பும் விடுத்தார்.

அந்த அழைப்போடு அவர் அமையில்லை. அடுத்த நாளே தனது வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை அவசர அவசரமாகக் கொழும்புக்கு அனுப்பி வைத்தார். முன்னேற்பாடு இல்லாமல், திடுதிப்பென இந்திய வெளியுறவு அமைச்சர் இலங்கைக்கு வந்தமை – அதுவும் குறுகிய மூன்று மணி நேரம் பயணமாகக் கொழும்பு வந்து திரும்பியமை – பலருக்கும் மூக்கில் விரலை வைக்கச் செய்தது என்பதும் உண்மைதான்.

இலங்கையின் புதிய ஜனாதிபதியை புதுடில்லிக்கு வருமாறு வேண்டும் உத்தியோகபூர்வ அழைப்பைக் கையளிக்கவே இந்திய வெளிவிவகார அமைச்சர் கொழும்பு வந்தார் எனக் கூறப்பட்டாலும், அதற்கு அப்பாலும் முக்கிய ஒரு காரியத்தை ஆற்றுவதும் அவரது கொழும்புக்கான அவசர – குறுகிய நேர – விஜயத்தில் அடங்கியிருந்தது என்பது இப்போது வெளியாகியிருக்கின்றது.

இலங்கையில் தமிழ் மக்களின் வேணவாக்களை நிறைவேற்றக் கூடிய அரசியல் தீர்வு ஒன்று காணப்படுவதை உறுதிப்படுத்துமாறு புதிய ஜனாதிபதி கோட்டாபய ராபக்ஷவிடம் இந்தியா சார்பில் நேரடியாக வலியுறுத்துவதும் இந்திய வெளிவிவகார அமைச்சரின் கொழும்பு விஜயத்தின் முக்கிய பணியாக இருந்தது என்பது இப்போது பகிரங்கமாகியிருக்கின்றது.

தமிழ் மக்கள் சமத்துவம், நீதி, அமைதி மற்றும் கண்ணியத்துடன் வாழக் கூடியதாக – அவர்களின் வேணவாக்களை நிறைவேற்றக் கூடிய தீர்வொன்றைக் காண்பதற்கான தேசிய நல்லிணக்கச் செயன்முறைகளை இலங்கை அரசு முன்னெடுக்கும் என்ற இந்தியாவின் எதிர்பார்ப்பை இலங்கையின் புதிய ஜனாதிபதியிடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார் என இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் புதுடில்லியில் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

தமிழர்கள் உட்பட அனைத்து சிறுபான்மையினரையும் புறமொதுக்கி விட்டு, தனித்து பௌத்த, சிங்கள வாக்குகளினால் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவு செய்யபட்டிருக்கையில் –

தனித்துச் சிங்கள, பௌத்த வாக்குகளினால் மட்டுமே தாம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார் என்று புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே தம்பாட்டில் அறிவித்திருக்கையில் –

அவசர அசவரமாகக் கொழும்பு விரைந்து தமிழர் பிரச்சினை தொடர்பான இந்தியாவின் செய்தியை – கரிசனையை – அதிருப்தியை – கவலையை – புதிய ஜனாதிபதியிடம் உயர்மட்டத்தில் நேரடியாக வலியுறுத்தி விவரித்திருக்கின்றது இந்தியா.

புதுடில்லியின் இந்த நிலைப்பாடு இலங்கையின் ஆட்சி மாற்றத்தோடு, இலங்கை தொடர்பான இந்தியாவின் அணுகுமுறைப் போக்கிலும் – வெளியுறவு ஊடாட்டப் பண்பியல்பிலும் – ஏதோ ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பதையே காட்டுகின்றது.

இதுவரை காலமும் பிரதமர் ரணில் தலைமையிலான அரசு இலங்கையில் தொடர்ந்த போது, சிறுபான்மையினரான தமிழர்களுடன் சமரசம் செய்து, இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய ஓர் அரசியல் தீர்வைக் காண்பதற்கான முயற்சிகள் – தொடர் எத்தனங்கள் – மேற்கொள்ளப்பட்ட வண்ணம் இருந்தன. குறைந்தபட்சம் அப்படி முயற்சிகள் நடக்கின்றன என்று காட்டும் போக்காவது தொடர்ந்தது.

ஆனால், தனித்து பௌத்த, சிங்கள வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்ட ஓர் அதிகார பீடம் கொழும்பில் ஆட்சியில் ஏறி இருப்பதால், இத்தகைய தீர்வு முயற்சிகள் அடியோடு அடிபட்டுப் போகும் எனக் கருதி இந்தியா தனது அணுகுமுறைப் போக்கை இவ்வளவு விரைவாக மாற்றிக் கொண்டது என்பதுதான் அவதானிகள் பலரின் கருத்து.

புதுடில்லியின் இந்த அணுகுமுறைப் போக்கில் சடுதியாக ஏற்பட்ட மாற்றத்தின் பின்புலத்தை கொழும்பின் புதிய ஆட்சிப் பீடம் புரிந்து கொள்ளுமாயின் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகள் – இந்தப் பின்னடைவின் பின்னரும் பிரகாசமானவையாகவே இருக்கும் என நம்பலாம். அப்படி நம்பிக்கை வைப்பதில் தப்பில்லை.

# அமைதிக்குப் பங்கம் விளைவிப்போர் மீது பாரபட்சமின்றிக் கடும் சட்ட நடவடிக்கை

## பாதுகாப்பு அமைச்சு அறிக்கை

கொழும்பு, நவ. 23

மக்கள் எவ்வித அச்சமும் இல்லாமல் தங்கள் இயல்பு வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல முடியும். மேலும் அமைதிக்கு இடையூறு விளைவிக்கும் எந்தவொரு நபர்களுக்கும் அல்லது குழுக்களுக்கும் எதிராக, தராதரம் பாராமல் சட்டத்தைக் கடுமையாகச் செயல்படுத்துமாறு பாதுகாப்பு பிரிவினர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது

– இவ்வாறு பாதுகாப்பு அமைச்சு சிறப்பு அறிக்கையை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: –

அண்மையில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் மத்தியில் மக்கள் எவ்வித அச்சமும் இல்லாமல் தங்கள் இயல்பு வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களால் எந்தவொரு அரசியல் பழிவாங்கல், கடத்தல் அல்லது தொந்தரவுகள் ஏற்படக்கூடும் என மக்கள் மத்தியில் எந்தவிதமான தேவையற்ற பீதியை ஏற்படுத்த வேண்டாம்.

எதிர்வரும் நாள்களில் பாதுகாப்புக் கடமைகளை முன்னெடுத்துச் செல்வதில் அதிக கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் பணியாற்றுமாறு பதில் பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள், மூத்த பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் அத்தியட்சகர்கள், மற்றும் அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் நாட்டின் பாதுகாப்பு குறித்து மேலும் விழிப்புடன் இருக்குமாறும், அந்தந்தப் பகுதிகளின் பாதுகாப்புக்கு அவர்களே பொறுப்பு எனவும் பதில் பொலிஸ் மா அதிபர் ஊடாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் தூர நோக்கிற்கு அமைய இன, மத மற்றும் அரசியல் வேறுபாடுகள் இல்லாத ஒரு நாட்டை உருவாக்கும் வகையில் நாட்டில் அமைதியான சூழலைப் பேணுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது.

எனவே, மக்கள் எவ்வித அச்சமும் இல்லாமல் தங்கள் இயல்பு வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல முடியும். மேலும் அமைதிக்கு இடையூறு விளைவிக்கும் எந்தவொரு நபர்களுக்கும் அல்லது குழுக்களுக்கும் எதிராக, தராதரம் பாராமல் சட்டத்தை கடுமையாக செயல்படுத்துமாறு பாதுகாப்பு பிரிவினர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது – என்றுள்ளது. (ஐ)

# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தலைவர்கள் தமிழரைத் தோல்வியடையச் செய்துள்ளனர்

## மரநடுகை மாத விழாவில் பொ.ஐங்கரநேசன்



யாழ்ப்பாணம்,நவ. 23

நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் அரசியல் தலைவர்கள் தமிழ் மக்களுக்குச் சரியான வழிகாட்டுதலைச் செய்யத் தவறிவிட்டனர்.அஜித் ரசிகர்கள் அஜித்தைக் கொண்டாடுவதைப் போல,ரசிக மனோ நிலையில் சஜித்தைக் கொண்டாட வைத்துள்ளனர். விஜயகலா அம்மையார் இனி மேல் ரணில் விக்கிரமசிங்கதான் தேசியத் தலைவர் என்றார். அவரை அடியொற்றி சஜித் பிரேமதாஸவை எமது தமிழ்த் தலைமைகள் தேசியத் தலைவராக்க முயன்று தாங்களும் தோற்று, அரசியல் ரீதியாகத் தமிழ் மக்களையும் தோல்வியடையச் செய்து விட்டார்கள் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற மரநடுகை மாத விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்–

தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசமாக நிறுவுவதற்கு ஜனாதிபதித் தேர்தலில் அவர்களின் முன்னால் இரண்டு தெரிவுகள் தான் இருந்தன. ஒன்று, தேர்தலைப் பகிஷ்கரிப்பது. மற்றையது, தமிழர்கள் சார்பாக ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவது. ஆனால், தேர்தலைப் பகிஸ்கரிக்கும் முடிவுக்குப் பெருமளவு ஆதரவு இல்லாத நிலையில் சிவில் சமூகப் பிரதிநிதிகளால் பொது வேட்பாளரை முன்னிறுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பொது வேட்பாளர் என்ற விடயத்தை முன்கூட்டியே முன்னெடுத்திருக்க வேண்டிய எமது தமிழ்த் தலைவர்கள் சிவில் சமூகம் அதை முன்னெடுத்த போது காலங்கடந்து போய் விட்டது என்று நிராகரித்து விட்டு ஒட்டு மொத்தத் தமிழ் வாக்குகளையும் சஜித் பிரேமதாசா அவர்களுக்குத் திரளாகக் கிடைக்கச் செய்தார்கள். இவர்கள் தென்னிலங்கையின் அரசியல் கள நிலவரங்களைச் சரியாகக் கணிக்கத் தவறி விட்டார்கள். தென்னிலங்கையில் சிங்கள மக்கள் தங்கள் இனம் சார்ந்து முடிவெடுத்து, ஒரே தேசமாகத் திரண்டு கோட்டாபயவைப் பெருவெற்றி பெற வைத்துள்ளார்கள்.

விடுதலைப்புலிகளின் காலம்வரை தமிழ் மக்களின் பேரம் பேசும் சக்தியாக அவர்கள் இருந்தார்கள். இலங்கையின் ஜனாதிபதியார் என்பதைத் தீர்மானிப்பவர்களாகத் தமிழ் தரப்பு இருந்தது. ஆனால், இன்றுதமிழ்த் தலைவர்களின் தவறான அணுகுமுறைகளால்தமிழ்மக்களின் ஆதரவு இல்லாமலேயே ஜனாதிபதி ஒருவர் தெரிவாக முடியும் என்ற நிலைமை ஏற்பட்டு, தமிழ் மக்களின் பேரம் பேசும் சக்தி பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

எமது தலைவர்கள் தீர்க்க தரிசனம் மிக்கவர்களாக இருந்திருந்தால், இந்தத் தேர்தலை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி இருக்க முடியும். சிங்கள கட்சி ஒன்றுக்குக்கு விற்றவாக்குகளை தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவருக்கு வழங்கி நாங்கள் தனியான ஒரு தேசம் என்பதை நிரூபித்திருக்க முடியும் – என்றார். (ஐ)




**நாளை**
24.11.2019
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம்: திரியோதசி பி.இ 12.40 வரை
திதி : சித்திரை பி.ப. 12.33 வரை
இராகுகாலம் : 04.41 – 06.11
சுப நேரம் : 09.11 – 10.41

# உத்தியோகபூர்வ இல்லங்களை பெறமாட்டாரராம் கோட்டாபய!

கொழும்பு, நவ. 23

எந்தவொரு உத்தியோகபூர்வ இல்லங்களையும் பெற்றுக் கொள்ளாமல் இருப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இராஜதந்திர மற்றும் உத்தியோகபூர்வ நடவடிக்கைக்காக மாத்திரம் ஜனாதிபதி மாளிகையை ஜனாதிபதி பயன்படுத்தவுள்ளார் எனக் கூறப்படுகின்றது.



ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ பல்வேறு அதிரடியான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்.

இந்தநிலையிலேயே அவர் தற்போது வசித்து வரும் இல்லத்தில் தொடர்ந்தும் தங்கியிருப்பதற்கு தீர்மானித்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவி வகித்த காலப்பகுதியில் கொழும்பு, மஹகமசேகர மாவத்தையில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் வசித்து வந்தார்.

அத்துடன், பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னரும் அந்த உத்தியோகபூர்வ இல்லத்தில் தொடர்ந்து தங்கியிருப்பதற்கு அமைச்சரவை அவருக்கு அனுமதி வழங்கிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# குமரப்பா – புலேந்திரன் நினைவுத்தூபி துப்புரவு செய்தவர்களுக்கு மிரட்டல்!

## அங்கு வந்த பொலிஸார் வீடியோ எடுத்ததால் அச்சம்



யாழ்ப்பாணம், நவ. 23

வல்வெட்டித்துறை, தீருவில் பகுதியில் நகர சபையின் பொது மைதானத்தில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டுள்ளோரை அச்சுறுத்தும் வகையில் பொலிஸார் வீடியோ எடுத்தனர் என அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர்.

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் பணிப்பில் தாம் அங்கு துப்புரவு பணியில் ஈடுபடுவோரையும் வாகனங்களையும் வீடியோ பதிவு செய்வதாகப் பொலிஸார் கூறினர்.

குமரப்பா – புலேந்திரனின் நினைவுத் தூபி அமைந்திருந்த நகர சபை பொது மைதானத்தை துப்புரவு செய்யும் பணி வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் தலைமையில் நேற்று ஆரம்பமானது.

அதன்போது நகர சபைக்குச் சென்ற வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொது மைதானத்தைத் துப்புரவு செய்வதை இடைநிறுத்துமாறு சபைச் செயலாளரிடம் தெரிவித்தார்.

எனினும் தவிசாளரின் முடிவின் அடிப்படையிலேயே துப்புரவுப் பணி இடம்பெறுவதாகவும் தன்னால் அதனைத் தடுக்க முடியாது என்றும் செயலாளர் பதிலளித்துள்ளார்.

இந்த நிலையில் பொது மைதானத்துக்குச் சென்ற பொலிஸார், அங்கு துப்புரவுப் பணியில் ஈடுபட்டுள்ளோரை ஒவ்வொருவராக வீடியோப் பதிவு செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# லலித் வீரதுங்க வெளிநாடு செல்ல விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கம்!

கொழும்பு, நவ. 23

முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவுக்கு வெளநாடு செஒல்வதற்காகவிதிக்கப்பட்டிருந்ததடையை மேன்முறையீட்டு நீதிமன்றம் 2020 ஆம் ஆண்டு மார்ச் 13 ஆம் திகதி வரை தற்காலிகமாக நீக்கியுள்ளது.

லலித் வீரதுங்கவால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை ஒன்றைப் பரிசீலனை செய்த தீபாலி விஜேசுந்தர மற்றும் ருவன் பெர்ணான்டோ ஆகிய நீதிபதிகள் குழாமினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

லலித் வீரதுங்க சார்பில் முன்னிலையான சட்டத்தரணி காஞ்சன ரத்வத்த, தனது கட்சிக்காரருக்கு ஜனாதிபதியுடன் இந்தியாவுக்கு விஜயமொன்றை மேற்கொள்ள அழைப்பு வந்துள்ளமையால், அந்தக் காலப் பகுதிக்காகத் தற்போது நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள வெளநாட்டுப்பயணத்தடையை நீக்குமாறுகோரிக்கைமுன்வைக்கப்பட்டது.

இந்தக்கோரிக்கையை ஏற்ற நீதிபதிகள் குழாம், லலித் வீரதுங்க மீது விதிக்கப்பட்டிருந்த வெளநாட்டுப்பயணத்தடையை 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதி வரை தளர்த்துவதற்கு உத்தரவிட்டனர்.

சில் துணிகளைப் பகிர்ந்தளித்த குற்றச்சாட்டில் முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட ஆகியோருக்கு மூன்று வருட கடூழியச் சிறைத்தண்டனை மற்றும் 5 கோடி ரூபா அபராதத்தையும் கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.தே.க. ஆதரவாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு ரணில் கோரிக்கை!


கொழும்பு, நவ. 23

ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் இட்டுள்ள பதிவிலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் எதிர்நோக்கிவரும் வன்முறைச் சம்பவங்கள் குறித்து ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார். (ஐ)




# சுகாதாரப் பரிசோதகருக்கு இடையூறு; ஹோட்டல் உரிமையாளருக்கு மறியல்



வவுனியா, நவ. 23

புளியங்குளத்தில் சுகாதாரப் பரிசோதகரின் நடவடிக்கைக்கு இடையூறை ஏற்படுத்தினார் என ஹோட்டல் ஒன்றின் உரிமையாளர் கைது செய்யப்பட்டு, வவுனியா நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமையுடன், அவரது சகோதரருக்குப் பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வவுனியா – வடக்கு புளியங்குளம் பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றுக்கு வவுனியா வடக்கு பொது சுகாதாரப் பரிசோதகர் மேஜெயா, புளியங்குளம் வடக்கு சுகாதாரப் பரிசோதகர் நிசாந்தன் ஆகியோர் சுகாதாரப் பரிசோதனைக்காகச் சென்று பரிசோதனை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது சுகாதாரச் சீர்கேடு காணப்பட்டதாகச் சுகாதாரப் பரிசோதகர்கள் அந்த ஹோட்டலுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைக்காகப் பதிவு செய்தபோது, அந்த ஹோட்டலில் நின்ற அதன் உரிமையாளர் மற்றும் உரிமையாளரின் சகோதரர் ஆகிய இருவரும் சுகாதாரப் பரிசோதகர்களுடன் முரண்பட்டு அவர்களது நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படுத்தியிருந்தனர்.

இதனையடுத்து சுகாதாரப் பரிசோதகர்கள், புளியங்குளம் பொலிஸில் அரச உத்தியோகத்தரான தமது செயற்பாட்டுக்கு இடையூறை ஏற்படுத்தியதாகச் செய்த முறைப்பாட்டையடுத்து ஹோட்டல் உரிமையாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வவுனியா நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அத்துடன், ஹோட்டல் உரிமையாளரின் சகோதரனுக்கும் நீதிமன்றத்தினால் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
WesternUnion WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தினை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்
உலகெங்குமிருந்து உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை
No.303, K.K.S. Road, Jaffna. Srilanka.Tel: 021 222 2670/5392 Fax: 021 222 3214
Email: srimurugan09@gmail.com srimurugan303@gmail.com

# குழந்தைகளைக் கடத்தி, அடைத்து வைத்தார்கள் என்று சுவாமி நித்தியானந்தா, பெண் சீடர்கள் மீது முறைப்பாடு

## அவர் வெளிநாட்டுக்குத் தப்பி ஓட்டம் என்கின்றது பொலிஸ்

ஆமதாபாத்,நவ.23

குழந்தைகளைக் கடத்தி, அடைத்து வைத்ததார் என வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், நித்யானந்தா வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்று விட்டார் என குஜராத் பொலிஸார் தெரிவித்து உள்ளனர்.

பெங்களூருவை அடுத்த பிடதியைத் தலைமையிடமாக கொண்டு பரமஹம்ச நித்யானந்த தியான பீடம் என்ற பெயரில் ஆசிரமம் நடத்தி வருபவர் நித்யானந்தா சாமியார். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் இவரது ஆசிரமத்தின் கிளைகள் உள்ளன.

குஜராத் மாநிலம் ஆமதாபாத்தின் புறநகர் பகுதியான ஹிராபூரில் உள்ள கிளையின் சார்பில், அங்குள்ள அடுக்கு மாடி குடியிருப்பு ஒன்றில் வீடு எடுத்து 4 குழந்தைகளை தங்க வைத்து இருந்தார் எனவும், நன்கொடை வசூலிக்க வைத்து அவர்களை சித்திரவதை செய்தனர் எனவும் முறைப்பாடு எழுந்தது.

இந்த முறைப்பாடு தொடர்பாக நித்யானந்தா, அவரது பெண் சீடர்களும், ஆசிரம நிர்வாகிகளுமான சாத்வி பிரன்பிரிய நந்தா, பிரியதத்வ ரித்தி கிரண் உள்ளிட்டோர் மீது ஆமதாபாத் பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

அவர்களில் சாத்வி பிரன்பிரிய நந்தா, பிரியதத்வ ரித்தி கிரண் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். அந்த 4 குழந்தைகளும் மீட்கப்பட்டனர். அவர்களில் இருவர் பெங்களூருவைச் சேர்ந்த ஜனார்த்தன சர்மாவின் குழந்தைகள் ஆவர். அவர்கள் இருவரும் ஜனார்த்தன சர்மாவிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

ஜனார்த்தன சர்மாவின் மூத்த மகள்களான லோக முத்ரா (வயது 21), நந்திதா சர்மா (18) ஆகியோர் இன்னும் ஆமதாபாத் ஆசிரமத்தில் இருப்பதும் தெரியவந்து உள்ளது.

தனது மகள்களை சந்திக்க ஆசிரம நிர்வாகிகள் அனுமதி வழங்க மறுத்ததால், ஜனார்த்தன சர்மா குஜராத் உயர்நீதி மன்றத்தின் உதவியை நாடினார். இதைத் தொடர்ந்துதான் அடுக்குமாடி குடியிருப்பில் குழந்தைகள் அடைத்து வைக்கப்பட்டு இருந்ததை அம்பலமானது.

இந்த நிலையில் ஆமதாபாத் புறநகர் பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.வி.அசாரி வியாழனன்று நிருபர்களிடம் கூறுகையில் –

நித்யானந்தா வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்று விட்டார் என்றும், தேவைப்பட்டால் வெளிநாட்டில் இருக்கும் அவரை உரிய வழியில் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை குஜராத் பொலிஸார் மேற்கொள்வார்கள் என்றும், இந்தியா திரும்பினால் அவரை நாங்கள் நிச்சயமாக கைது செய்வோம் என்றும் தெரிவித்தார்.



நித்யானந்தாவின் பெண் சீடர்கள் இருவரைக் கைது செய்து காவலில் வைத்து விசாரித்து வருவதாகவும் அவர் கூறினார்.

குஜராத் மாநில உள்துறை மந்திரி பிரதீப் சிங் ஜடேஜா கூறுகையில், இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட யாரையும் சட்ட நடவடிக்கையில் இருந்து தப்பவிட மாட்டோம் என்றார்.

இதற்கிடையே, நித்யானந்தா ஹிராபூர் கிராமத்தில் ஆசிரமம் நடத்தும் நிலம் டெல்லி பப்ளிக் பள்ளிக்கு சொந்தமானது என தெரியவந்து உள்ளது.

சட்ட விதிமுறைகளை மீறி அந்த நிலத்தை ஆசிரமம் நடத்த குத்தகைக்கு கொடுத்ததாக டெல்லி பப்ளிக் பள்ளியின் முதல்வர் ஹிதேஷ் புரியை பொலிஸார் கைது செய்தனர் எனவும், பின்னர் அவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார் எனவும் ஆமதாபாத் புறநகர் துணை பொலிஸ் அத்தியட்சகர் கே.டி.கமாரியா தெரிவித்தார்.

# 2021 தமிழ் நாடுத் தேர்தலில் மக்கள் மிகப்பெரும் அதிசயம் நிகழ்த்துவராம்

## ரஜினி கூறுகின்றார்: கமலுடன் இணைவாரம்



சென்னை,நவ23

2021ஆம் ஆண்டுத் தேர்தலில் மிகப்பெரிய அற்புதத்தை, அதிசயத்தை தமிழக மக்கள் நிகழ்த்துவார்கள் என்று நடிகர் ரஜினிகாந்த் கூறி உள்ளார்.

நடிகர் கமல்ஹாசன் 'மக்கள் நீதி மய்யம்' என்ற கட்சியைத் தொடங்கி நடத்தி வருகிறார். இந்த ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட மக்கள் நீதி மய்யம் கட்சி தோல்வி அடைந்தது.

கமல்ஹாசனைப் போல் அவரது நண்பரும், நடிகருமான ரஜினிகாந்தும் அரசியலில் ஈடுபடப் போகிறார் என அறிவித்து உள்ளார். வருகிற 2021 ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் தமிழக சட்டசபை தேர்தலுக்கு முன்பு அவர் புதிய கட்சியை தொடங்கதிட்டமிட்டு உள்ளார். சினிமாவில் நடித்துக் கொண்டே அதற்கான ஆயத்த பணிகளை அவர் செய்து வருகிறார்.

கடந்த 8 ஆம்திகதி ரஜினிகாந்த் சென்னையில் நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையில், தமிழகத்தில் சரியான ஆளுமைக்கு, தலைமைக்கு வெற்றிடம் இருப்பதாக கூறியமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அவரது கருத்துக்கு பலத்த எதிர்ப்பு தெரிவித்த அ.தி.மு.க., தமிழகத்தில் தலைமைக்கு வெற்றிடம் இல்லை என்று கூறியது. தி.மு.க. தரப்பிலும் ரஜினிகாந்த் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

கமல்ஹாசனின் 60 ஆண்டு கால சினிமா பயணத்தை கொண்டாடும் வகையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டு கமல்ஹாசனை பாராட்டிப் பேசிய ரஜினிகாந்த், 2 ஆண்டுகளுக்கு முன்பு முதலமைச்சர் ஆவோம் என்று எடப்பாடி பழனிசாமி கனவில் கூட நினைத்திருக்க மாட்டார். 4 மாதங்களில் ஆட்சி கவிழும் என்று அனைவருமே சொன்னார்கள். ஆனால் அதிசயம் நடந்தது. நேற்றும் அதிசயம் நடந்தது. இன்றும் அதிசயம் நடக்கிறது. நாளையும் அதிசயம் நடக்கும்.- என்று கூறினார்.

அவர் இவ்வாறு கூறியது பரபரப்புக்கும் விமர்சனத்துக்கும் உள்ளானது.

கடந்த சில நாள்களுக்கு முன்பு சென்னை விமான நிலையத்தில் பேட்டி அளித்த ரஜினிகாந்த், தமிழக மக்கள் நலனுக்காக நானும், கமல்ஹாசனும் இணைய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் இணைந்து செயல்படுவோம் என்று கூறினார்.

அவர் இவ்வாறு கூறியது பற்றி நேற்று முன்தினம் கமல்ஹாசனிடம் நிருபர்கள் கேள்வி எழுப்பிய போது, தேவைப்பட்டால் தமிழக மக்களின் நலனுக்காக ரஜினிகாந்துடன் இணைந்து செயல்படுவேன் என்று அவர் பதில் அளித்தார்.

கமல்ஹாசன் இவ்வாறு கூறியது பற்றி மக்கள் நீதி மய்யத்தின் மகளிர் அணி ஒருங்கிணைப்பாளரும், நடிகையுமான ஸ்ரீபிரியா பின்னர் கருத்து தெரிவிக்கையில், ரஜினிகாந்தும், கமல்ஹாசனும் இணைந்தாலும் எங்கள் தலைவர் கமல்ஹாசன்தான் முதலமைச்சராக வரவேண்டும் எனத் தான் விரும்புகிறாா் என்றும், சட்டசபை தேர்தல் முடிவு இதற்கான சாத்தியக்கூறை ஏற்படுத்திக் கொடுக்கும் என்றும் கூறினார்.

ரஜினிகாந்தும், கமல்ஹாசனும் இணைந்து செயல்படுவது பற்றிய தகவல்கள் வெளியாகி வரும் சூழ்நிலையில், ஸ்ரீபிரியா இவ்வாறு கூறியது, ரஜினிகாந்த் ரசிகர்கள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் கோவாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாவில் கலந்து கொண்டு சிறப்பு விருது பெற்ற ரஜினிகாந்த் அங்கிருந்து விமானம் மூலம் நேற்று சென்னை திரும்பினார்.

விமான நிலையத்தில் அவர் நிருபர்களிடம் பேசுகையில், கோவாவில் நடைபெற்ற திரைப்பட விழாவில் எனக்கு விருது வழங்கியதற்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். நான் விருது வாங்க தமிழ் மக்கள்தான் காரணம். அந்த விருதை தமிழக மக்களுக்கே சமர்ப்பிக்கிறேன் என்றார்.

அப்போது அவரிடம், நீங்களும், கமல்ஹாசனும் அரசியலில் இணைந்து செயல்பட்டால் முதலமைச்சர் வேட்பாளர் யார்? என நிருபர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு அவர் பதில் அளிக்கையில், யார் முதலமைச்சர் என்பது தேர்தல் நேரத்தில் அப்போதைய சூழ்நிலையில் எடுக்க வேண்டிய முடிவு. நான் கட்சி ஆரம்பித்த பின்பு, கட்சி உறுப்பினர்களுடன் பேசி எடுக்க வேண்டிய முடிவு. அப்போது நான் முடிவை சொல்கிறேன். அதுவரை அதைப்பற்றி பேச நான் விரும்பவில்லை என்றார்.

அத்துடன், 2021 ஆம் ஆண்டு தேர்தலில் தமிழக மக்கள் மிகப்பெரிய அற்புதத்தை, அதிசயத்தை, நூற்றுக்கு நூறு சதவீதம் நிகழ்த்துவார்கள் என்றும் அப்போது அவர் கூறினார்.

தற்போதை தமிழக சட்ட சபையின் பதவிகாலம் வருகிற 2021ஆம் ஆண்டு முடிவடைகிறது. எனவே சட்டசபை தேர்தலுக்கு இன்னும் 2 ஆண்டுகள்தான் உள்ளன.

இந்த நிலையில் இணைந்து செயல்படுவது பற்றியும், தமிழக அரசியல் சூழ்நிலை குறித்தும் ரஜினிகாந்தும், கமல்ஹாசனும் அவ்வப்போது பரபரப்பான கருத்துகளை தெரிவித்து வருகிறார்கள். இதனால் தமிழக அரசியல் களம் சூடுபிடிக்கிறது.

# 21 வயது இளைஞர் நீதிபதியாகின்றார்!

## ராஜஸ்தானில் புதுமை



ஜெய்ப்பூர்,நவ.23

ஜெய்ப்பூரைச் சேர்ந்த 21 வயது இளைஞர் ராஜஸ்தான் நீதித்துறை சேவைகள் தொடர்பான தேர்வில் வெற்றி பெற்று விரைவில் நீதிபதியாக பதவி யேற்கவுள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரைச் சேர்ந்த 21 வயதான மயங்க் பிரதாப் சிங், ராஜஸ்தான் பல்கலைக்கழகத்தில் ஐந்தாண்டு எல்.எல்.பி., படிப்பை முடித்து, ராஜஸ்தான் நீதித்துறை சேவைகள் தொடர்பான தேர்வில் வெற்றி பெற்றுள்ளார்.

இதையடுத்து, விரைவில் அவர் நீதிபதியாக பதவியேற்கவுள்ளார். இதன் மூலம், நாட்டின் மிக இளம் வயது நீதிபதி என்ற பெருமை, அவருக்கு கிடைக்கவுள்ளது.

இது குறித்து மயங்க் பிரதாப் சிங் கூறிய போது, நீதிபதிகளுக்கு சமூகத்தில் இருக்கும் மரியாதை மற்றும் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கண்டு நீதித்துறை சேவை மீது எனக்கு ஆர்வம் ஏற்பட்டது. அதனால் தான் இந்த படிப்பை தேர்ந்தெடுத்து படித்தேன்.

இந்தத் தேர்வில் முதல் முயற்சியிலேயே வெற்றி பெற எனக்கு உறுதுணையாக இருந்த எனது பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் நண்பர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

நீதித்துறை சேவைகளுக்கான தேர்வை எழுதுவதற்கான குறைந்தபட்ச வயது 23 ஆக இருந்தது. இதனை ராஜஸ்தான் அரசாங்கம் இந்த ஆண்டு முதல் 21 வயதாக குறைத்தது. இதன் காரணமாகவே தன்னால் இந்த தேர்வை எழுத முடிந்ததாகவும், இதன் மூலம் தனக்கு இளம் வயதில் நீதியை கற்றுகொள்வதற்கான வாய்ப்பு கிடைத்திருப்பதாகவும் மயாங்க் தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikathir



# சர்ச்சைக்குரிய சியாச்சின் பகுதியை சுற்றுலா மையமாக்கின்றது இந்தியா

## கடுமையாக எதிர்க்கின்றது பாகிஸ்தான்



இஸ்லாமாபாத்,நவ.23

உலகின் மிக உயரமான போர்க்களமான சியாச்சினில் சுற்றுலாப் பயணிகளை அனுமதிக்க இந்திய மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அதற்கு பாகிஸ்தான் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இந்திய அரசின் முடிவின்படி சியாச்சின் அடிவார முகாம் முதல் குமார் சாவடி வரை சுற்றுலாப் பயணிகள் சென்று வரலாம்.

கரடுமுரடனான மலைப் பிரதேசத்திலும், மோசமான வானிலையிலும் இந்திய இராணுவ வீரர்கள் மற்றும் பொறியியலாளர்கள் நாட்டின் பாதுகாப்புக் காகப் பணியாற்றுவதை பொதுமக்கள் நேரில் பார்த்து அறிந்து கொள்ளும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச் சர் ராஜ்நாத்சிங் சமீபத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பேசு கையில் தெரிவித்தார்.

இந்நிலையில் இஸ்லாமாபாதில் நேற்று முன்தினம் செய்தியாளார்களைச் சந்தித்த பாகிஸ்தான் வெளியுறவுத் துறை செய்தித்தொடர்பாளார் முகமது பைசலிடம் இது தொடர்பாகக் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த முகம்மது பைசல், கடும் ஆட்சேபம் தெரிவித்தார்.

அவர் கூறுகையில், சியாச்சின் பகுதியை இந்தியா வலுக்கட்டாயமாக ஆக்கிரமித்து வைத்துள்ளது. எனவே, அது இரு நாடுகளுக்கு இடையிலான பிரச்னைக்குரிய இடம். அப்படி இருக்கும்போது அங்கு சுற்றுலாவுக்கு அனுமதி அளிப்போம் என்று இந்தியா எப்படி கூற முடியும்?

இதனை பாகிஸ்தான் ஒருபோதும் அனுமதிக்காது என்றார்.

## 4 இந்தியர்களை தீவிரவாதிகளாக அறிவிக்கச் செய்ய பாக். எத்தனம்



சீனாவின் உதவியுடன் நான்கு இந்தியர்களை தீவிரவாதிகள் பட்டியலில் சேர்க்க பாகிஸ்தான் அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது.

இந்தியாவால் தேடப்படும் தீவிரவாதியான மசூத் அஸாரை ஐநா.பாதுகாப்பு கவுன்ஸில் அண்மையில் தீவிரவாதியாக அறிவித்து தடை விதித்தது.

இதையடுத்து இந்தியர்கள் சிலரையும் இந்த பட்டியலில் சேர்க்க பாகிஸ்தான் அரசு முயற்சித்து வருகிறது. சீனாவின் துணையுடன் கடந்த வாரம் 2 இந்தியர்களைதீவிரவாதிகள் பட்டியலில் சேர்க்கும்படி பாகிஸ்தான் கோரியுள்ளது.

பலூசிஸ்தான், பெஷாவர் ஆகிய இடங்களில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக அந்த இருவர் மீதும் வழக்குகள் பதிவாகியிருக்கின்றன எனப் பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

அண்மையில் ஆந்திராவைச் சேர்ந்த அங்காரா அப்பாஜி என்பவர் காபூலில் உள்ள வங்கியில் பணியாற்றி வந்த நிலையில் அவர் லாகூரில் தீவிரவாதத் தாக்குதல் நடத்தினார் என்க் குற்றம் சாட்டிய பாகிஸ்தான் அரசு அவரையும் தடை செய்யக் கோரியுள்ளது.

## இஸ்ரேல் பிரதமர் நெத்தன்யாகு கைதாகும் சூழலில் பதவியிழப்பு

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு மீது 3 ஊழல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டமையால் சட்ட ரீதியாக வேறு வழியே இல்லாமல் அவர் தமது பதவியை ராஜினாமாச் செய்யும் சூழல் உருவாகியுள்ளது.

அவர் மீதான 3 வழக்குகளிலும் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் பத்து வருடகாலம் சிறைத் தண்டனை கிடைக்கலாம்.

தொடர்ச்சியாக இரண்டு தேர்தல்கள் இந்த



ஆண்டில் நடைபெற்ற நிலையில் கடும் குழப்பமான அரசியல் சூழலில் நெத்தன்யாகு கைது செய்யப்பட்டால் அடுத்து நாட்டை யார் ஆள்வது என்ற கேள்வி எழுந்துள்ளது.

நெத்தன்யாகு சுமார் 2 லட்சத்து அறுபத்து நான்கு ஆயிரம் டொலர் மதிப்புள்ள வெகுமதிகளைப் பெற்றுக் கொண்டார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது . ஊழல் வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு 3 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

நெத்தன்யாகு கைது செய்யப்படக் கூடிய நிலையில் இஸ்ரேலின் புதிய பிரதமரை தேர்வு செய்யுமாறு அதிபர் அறிவிப்பு விடுத்துள்ளார்.

# பிளாஸ்டிக் கழிவுகள் மூலம் சிறிய செயற்கைத் தீவு



*பிரான்ஸைச் சேர்ந்த தொழில் அதிபர் ஒருவர், பிளாஸ்டிக் கழிவுகளை கொண்டு ஐவோரி கோஸ்ட் (Ivory Coast ) பகுதியில் சிறிய செயற்கைத் தீவை உருவாக்கியுள்ளார்.*

*படகு தொழில் ஆரம்பிக்கும் திட்டத்துடன் சென்ற எரிக் பேக்கர் என்பவர், அங்கு பிளாஸ்டிக் போத்தல்கள் போன்ற கழிவுகளால் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டிருப்பதை கண்டார்.*

*பின்னர் அவற்றை சேகரித்து, நீச்சல் குளங்கள், சிறிய வீடுகளை கொண்ட சிறிய தீவை உருவாக்கி, சூரிய ஒளி மின்னுற்பத்தி மூலம் மின்சார வசதி செய்து கொடுத்துள்ளார்.*

*அந்தத் தீவுக்கு வாரத்துக்கு சுமார் 300 பேர் வருகை தருவதால் எரிக் பேக்கருக்கு போதிய லாபமும் கிடைக்கிறது.*

## கனடாவில் அமைச்சராகிறார் தமிழ் வம்சாவளிப் பெண்மணி



கனடாவில் தமிழ்ப்பெண் அனிதா ஆனந்த் அமைச்சராகின்றார்.

கனடாவில் 338 இடங்களை கொண்ட நாடாளுமன்றத்துக்கு கடந்த மாதம் 21 ஆம் திகதி தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் லிபரல் கட்சிக்கும், ஆண்ட்ரூ ஸ்கீர் தலைமையிலான கொன்சர்வேடிவ் கட்சிக்கும் இடையே கடும் போட்டி நிலவியது.

இதில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் லிபரல் கட்சி 157 இடங்களில் வெற்றி பெற்று, தனிப்பெரும் கட்சியாக வந்துள்ளது.

கொன்சர்வேடிவ் கட்சி 121 இடங்களுடன் எதிர்க்கட்சி அந்தஸ்தைப் பிடித்தது.

இந்திய நாடாளுமன்றத்தில் மொத்தம் 13 சீக்கிய எம்.பி.க்கள்தான் இருக்கிறார்கள். ஆனால் கனடா நாடாளுமன்றத்தில் 18 சீக்கிய எம்.பி.க்கள் அலங்கரிக்கிறார்கள்.

தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து பிரதமர் ட்ரூடோ தனது புதிய மந்திரிசபையை புதனன்று அமைத்தார்.

இந்த மந்திரிசபையில் முதல் முறை எம்.பி.யாகி உள்ள தமிழ்நாட்டின் வேலூர் பகுதியை சேர்ந்த அனிதா ஆனந்த் என்ற பெண் இடம் பெற்றுள்ளார். இவர் அங்குள்ள ஒன்டாரியா மாகாணத்தில், ஓக்வில்லே தொகுதியில் இருந்து கனடா நாடாளுமன்றத்துக்கு லிபரல் கட்சி சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இவர் பொது சேவைகள் மற்றும் கொள்முதல் துறை மந்திரியாகி இருக்கிறார்.

கனடாவில் ஒரு இந்துப்பெண் எம்.பி.மற்றும் மந்திரி ஆகி இருப்பது இதுவே முதல் முறை.

இவரது தந்தை டாக்டர் சுந்தரம் விவேகானந்த் அறுவை சிகிச்சை மருத்துவ நிபுணர் ஆவார். தாயார் டாக்டர் சரோஜ், மயக்க மருத்துவ நிபுணர் ஆவார்.

கனடாவில் நோவாஸ்காட்டியா மாகாணத்தில் கென்ட்வில்லே நகரில் 1967 ஆம் ஆண்டு பிறந்த அனிதா ஆனந்த், முதுநிலை சட்டப்படிப்பு படித்து அங்குள்ள டொராண்டோ பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை பேராசிரியையாக பணியாற்றியவர் ஆவார். ஜோன் என்ற கணவரும், 4 குழந்தைகளும் உள்ளனர்.

அனிதா ஆனந்த் மந்திரி ஆகி இருப்பது உலகமெங்கும் வாழும் தமிழ்ப்பெண்களுக்கு உற்சாகத்தை அளித்துள்ளது.

இந்து நாகரிகத்தின் கனடா அருங்காட்சியகத்தின் தலைவர் பதவியையும் அனிதா ஆனந்த் வகித்துள்ளார்.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் மந்திரிசபையில் இடம் பெற்றுள்ள 7 புதிய மந்திரிகளில் அனிதா ஆனந்த் ஒருவர்.

இந்திய வம்சாவளியை சேர்ந்த மேலும் 3 பேருக்கு ஜஸ்டின் ட்ரூடோ மந்திரி பதவி அளித்துள்ளார். அவர்கள் 3 பேரும் சீக்கியர்கள் ஆவார்கள். மேலும் அவர்கள் முந்தைய மந்திரிசபையிலும் இடம் பெற்றிருந்தவர்கள்.

அவர்களில், ஹர்ஜித் சிங் சாஜனுக்கு (வயது 49) இராணுவ மந்திரி பதவி தரப்பட்டுள்ளது. இவர் முந்தைய மந்திரிசபையிலும் இராணுவ மந்திரியாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

நவ்தீப் பெயின்ஸ் (42), கண்டுபிடிப்பு, அறிவியல், தொழில்நுட்பத்துறை மந்திரி ஆகி இருக்கிறார்.

பர்தீஷ் சாக்கர்(39), பன்முகம், உள்ளடக்கம், இளைஞர் துறை மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய மந்திரிசபை குறித்து பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ டுவிட்டரில், 'புதிய மந்திரிசபை வலுவான, திறமையான அணி ஆகும். நிறைய பணிகள் காத்திருக்கின்றன. கனடாவை முன்னோக்கி அழைத்துச்செல்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்'- எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

# வீதிப் பெயர்ப் பலகையில் நீக்கப்பட்டது தமிழ்மொழி

## பாணந்துறையில் சம்பவம்




கொழும்பு, நவ. 23

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தெற்கில் வீதி ஒன்றின் பெயர்ப்பலகையிலிருந்த தமிழ் எழுத்துக்கள் மறைக்கப்பட்டுள்ளன.

நாட்டில் வீதிப் பெயர்ப் பலகைகள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் இடம்பெறவேண்டும் என்ற நடைமுறை பின்பற்றப்படும் நிலையில் சிறுபான்மை மக்களை அதிருப்தியடைய வைக்கும் வகையில் இந்தச் செயற்பாடு அமைவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாணந்துறையில் உள்ள சுசந்த மாவத்தை வீதிப் பெயர்ப்பலகையிலேயே தமிழ் மொழி நீக்கம் செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# மேலும் நால்வரை நீக்குகின்றது சு.க.

கொழும்பு, நவ. 23

ஜனாதிபதித்தேர்தலின்போது கட்சி முடிவுக்கு மாறாகச் செயற்பட்ட மேலும் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கட்சியை விட்டு நீக்குவதெனச் சுதந்திரக்கட்சியின் மத்தியகுழு தீர்மானித்துள்ளது.

டிலான் பெரேர, எஸ்.பி. திசநாயக்க, லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன, விஜித் விஜயமுனி சொய்சா ஆகியோரே நீக்கப்படவுள்ளனர்.

இவர்களின் நீக்கம் பற்றி, தேர்தல் ஆணைக்குழு மற்றும் நாடாளுமன்றப் பொதுச் செயலாளர் ஆகியோருக்கு இந்த வாரம் எழுத்து மூலம் அறிவிக்கப்படும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் முன்னதாகடிலான்பெரேர, எஸ்.பி.திசநாயக்க, லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன ஆகியோர் பொதுஜன பெரமுன கட்சியில் இணைந்திருந்தனர். விஜித் விஜயமுனி சொய்சா ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்தார்.

இதேவேளை, நாடாளுமன்றத் தேர்தலுக்கான கட்சியின் வேட்பாளர்களைத்தேர்வுசெய்ய பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாஸ தலைமையிலான ஐந்து பேர் கொண்ட நியமனக் குழுவைச் சுதந்திரக்கட்சி நியமித்துள்ளது.

இதில் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, மஹிந்த அமரவீர ஆகியோரும் உள்ளடங்குகின்றனர். (ஐ)

# அரச ஊழியர் வெளிநாடு செல்ல விதிக்கப்பட்ட தடையில் தளர்வு

## திருத்திய சுற்றறிக்கை வெளியீடு

கொழும்பு, நவ. 23

அரச உத்தியோகத்தர் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ள தடை விதித்து வெளியிடப்பட்ட சுற்றறிக்கை நிபந்தனைகள் தளர்த்தப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

அரச உத்தியோகத்தர்களின் வெளிநாட்டுப் பயணத்துக்கான அனுமதிகள் மறு அறிவித்தல் வரை தடை செய்யப்படுவதாக ஜனாதிபதியின் செயலாளரால் சுற்றறிக்கை ஒன்று கடந்த புதன்கிழமை வெளியிடப்பட்டது.

அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், ஆளுநரின் செயலாளர் என அனைத்துத் திணைக்களத் தலைவர்களுக்கும் இந்தச் சுற்றறிக்கை அனுப்பிவைக்கப்பட்டது.

இந்த நிலையில் தனிப்பட்ட வெளிநாட்டுப் பயணங்கள் மற்றும் பட்டப்படிப்புக்காக வெளிநாடு செல்வோருக்கு இந்தச் சுற்றறிக்கை செல்லாது என்று ஜனாதிபதி செயலகம் தளர்வை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்களுக்கும் அனுமதி வழங்கப்படும். எனினும் இத்தகைய வெளிநாட்டுப் பயணங்களுக்கு திணைக்களத் தலைவரின் திருப்தி வெளிப்படுத்தப்படவேண்டும்.

அத்துடன், அரச உத்தியோகத்தர்களின் வெளிநாட்டுப் பயணம் தொடர்பான ஆவணங்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும் என்று திருத்தப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அ.தா.பாலசுப்ரமணியன்
பி.பி.ஸி தமிழ்.



# கோட்டாபயவுக்கு அழைப்பு:

# இலங்கையை வசப்படுத்தும் முயற்சியில் சீனாவை முந்துகின்றதா இந்தியா?

சீனாவுக்கு நெருக்கமானவர் என்று கருதப்பட்ட இலங்கையின் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நவம்பர் 29 ஆம் திகதி இந்தியத் தலைநகர் டெல்லிக்கு வருகிறார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக கோட்டாபய தேர்ந்தெடுக்கப்பட்ட உடனே, வழக்கத்துக்கு மாறான அவசரத்துடன் இந்தியா தனது வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்ங்கரை இலங்கைக்கு அனுப்பியது.

அவர் புதிய அதிபரை சந்தித்துப் பேசியயமையுடன், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வாழ்த்துச்செய்தியைகோட்டாபயவிடம்அவர்ஒப்படைத்தார்.

இந்தியப் பிரதமரின் அழைப்பை ஏற்று கோட்டாபயவும் புது டெல்லி வர ஒப்புக்கொண்டார். கோட்டாபய பயணம் செய்யப்போகும் முதல் வெளிநாடு இந்தியாதான்.

இந்திய வெளியுறவு அமைச்சரின் அவசரமான இலங்கைப் பயணத்தையும், தயக்கமின்றி கோட்டாபய இந்தியா வர ஒப்புக்கொண்டமையையும் எப்படிப் புரிந்துகொள்வது?

வழக்கமாக, இலங்கையில் பிரதமர், ஜனாதிபதி முதலிய பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் முதல்வேலையாக இந்தியா வருவது வழக்கம். டெல்லியில் அவர்கள் பூஜை செய்யப் போகிறார்கள் என்று கூட தமாஷாகச் சொல்வார்கள்.

ஆனால், தற்போது சீனாவை கருத்தில் கொண்டு, புதிய அதிபர் இந்தியா வருவதற்கு முன்பே இந்தியா தனது வெளியுறவு அமைச்சரை இலங்கை அனுப்பியுள்ளது. நிலைமை மாறியுள்ளது என்கிறார் மூத்த இந்தியப் பத்திரிகையாளரும், இலங்கையில் இருந்து பணியாற்றிய அனுபவம் பெற்றவருமான நிருபமா சுப்ரமணியன்.

2015 ஜனாதிபதி தேர்தலில் மஹிந்தவின் தோல்விக்குப் பின்னால் இந்தியா இருப்பதாகப் பார்க்கப்படும் நிலையில், நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். இப்போது இந்தியா உறவை மேம்படுத்த விரும்புகிறது என்ற தகவலை வெளியிட இந்தியா விரும்பியிருக்கலாம் என்கிறார் அவர்.

கோட்டாபய சீனா நோக்கிய சாய்வு உள்ளவர் என்று பார்க்கப்படுவதே, இந்திய வெளியுறவு அமைச்சர் ஏன் அவசர அவசரமாக இலங்கை சென்றார் என்பதை விளக்குகிறது என்றே பல பார்வையாளர்களும் சொல்கிறார்கள்.

இலங்கையில் இந்தியா என்ன சாதிக்க விரும்புகிறது என்ற கேள்விக்கு, இதற்கு ஒரு விடை



இல்லை. பல காரணங்கள் இருக்கலாம் என்கிறார் நிருபமா.

### மைத்திரிபால மீது அதிருப்தி கொண்ட இந்தியா

ஆனால், 'ஓர்கனைசர் ரிசர்ச் ஃபவுண்டேன்' என்ற ஆராய்ச்சி அமைப்பின் சென்னை பிரிவின் தலைவரான என்.சத்தியமூர்த்தி இதற்கு ஒரு விடை சொல்கிறார்.

2015 ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோற்று, மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்ற பிறகு, இலங்கையில் இந்தியாவுக்கு முக்கியத்துவம் கூடும், இலங்கையின் சீனாவின் செல்வாக்கு மட்டுப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அந்த எதிர்பார்ப்புக்கு மாறாக, சீனாவின் செல்வாக்கு இலங்கையில் குறையவே இல்லை என்கிறார் அவர்.



இந்தியாவின் எதிர்பார்ப்புகளை நிறைவேறுவதில் சிறிசேன அரசு எந்த முன்னேற்றமும் காட்டவில்லை என்ற ஏமாற்றம் இந்தியாவுக்கு இருந்தது. குறிப்பாக திருகோணமலை துறைமுக மேம்பாட்டுத் திட்டத்தை இந்தியாவுக்கு வழங்குவது போன்றவற்றில் முன்னேற்றம் ஏற்படவில்லை. இந்தப் பின்னணியில், சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் தரும் அழுத்தத்தில் அவை கூறுவதை செவிமடுக்கும் நிலை இலங்கைக்கு ஏற்படும் முன்பே உறவைக் கட்டமைக்க இந்தியா நினைத்திருக்கும் என்கிறார் சத்தியமூர்த்தி.

### அமெரிக்கா லகான்?

அதே நேரம் இந்தியா வருவதற்கு கோட்டாபய எப்படி உடனடியாக ஒப்புக் கொண்டார் என்ற கேள்விக்கு, பிரான்ஸில் வாழும் இலங்கைத் தமிழ் எழுத்தாளர் கௌரிபால் சாத்திரி ஒரு விளக்கம் தருகிறார்.

கோட்டாபய தமது அமெரிக்க குடியுரிமையைத் துறந்துவிட்டார் எனக் கூறப்பட்டாலும், அமெரிக்கா வெளியிட்ட குடியுரிமை துறந்தவர்கள் பட்டியலில் கோட்டாபய பெயர் இன்னும் அதிகாரபூர்வமாக வெளியாகவில்லை.

அமெரிக்காவில் கோட்டாபயவின் சொத்துகள் இருக்கின்றன. இதைவைத்து, கோட்டாபய சீனா பக்கம் அப்பட்டமாக சாய்ந்துவிடாமல் தடுப்பதற்கான அழுத்தத்தை அமெரிக்கா கொடுத்திருக்கும் என்கிறார் சாத்திரி.

இதே கருத்து, வேறு சில பார்வையாளர்களுக்கும் இருக்கிறது.

சரி, கோட்டாபயவின் இந்தியப் பயணம் எப்படி இருக்கும்? இந்தியா விரும்பியதை இலங்கையில் எப்படி எட்டும்?

கோட்டாபய பொறுப்பேற்று 15 நாள்களுக்குள் திடீரென எதுவும் மாறிவிடாது. இரு தரப்பு மற்றும் சர்வதேசப் பிரச்சனைகளில் என்னமாதிரியான பார்வை இருக்கிறது என்று இலங்கை மற்றும் இந்தியா ஒன்று மற்றொன்றை மதிப்பீடு செய்யும். தனது எதிர்பார்ப்புகளை இந்தியா பகிர்ந்துகொள்ளும். தமிழர் பிரச்சனை போன்றவற்றை எழுப்பும். ஆனால், கோட்டாபயவின் முதல் பயணத்திலேயே புதிய ஒப்பந்தம் போன்றவற்றை எதிர்பார்க்க முடியாது என்கிறார் சத்தியமூர்த்தி.

# வசதிகள் குறைந்த குடும்பங்களுக்கு அரச வேலைவாய்ப்பில் முன்னுரிமை

## அமைச்சர்களிடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வலியுறுத்து

கொழும்பு, நவ. 23

குறைந்த வருமானம் ஈட்டும் குடும்பங்களைச் சேர்ந்தோருக்கு அரச துறை வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை வழங்க அமைச்சர்கள் கவனம் செலுத்தவேண்டும். அதன்போதும் அவர்களின் திறன் குறித்து கவனம் செலுத்தத் தேவையில்லை என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வலியுறுத்தினார்.

அரச நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கு தலைவர்களை நியமிப்பதை ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்கச் சிறப்புக் குழு நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற அமைச்சரவை நியமனத்தின் பின்



உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இராஜாங்க அமைச்சர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை நியமிக்கப்படுவார். அமைச்சர்கள் தமது கடமைகளைத் திறம்பட நடத்தவேண்டும்.

பொதுமக்கள் எங்கள் மீது பெரும் எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளனர்.

அரசியலை விரும்பாத மக்களின் மனங்களை மாற்றும் நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்க வேண்டும்.

கடந்த அரசின் கீழ் சில அரச அமைப்புகள் இழப்புகளை எதிர்கொண்டன. அதன் விளைவாக திறைசேரிக்கு சுமை ஏற்பட்டது – என்றார். (ஐ)

# நயினாதீவு மீனவர்களிடம் சிக்கியது பாரிய சுறாமீன்



யாழ்ப்பாணம், நவ. 23

யாழ்ப்பாணத்தில் மீனவர் ஒருவருக்கு பாரிய சுறா மீனொன்று சிக்கியுள்ளது.

இந்தச் சுறா மீன் 2000 கிலோ கிராம் நிறையுடையதென அந்த மீனவர் தெரிவித்துள்ளார்.

நயினாதீவை சேர்ந்த மீனவர் ஒருவரின் வலையிலேயே நேற்று வெள்ளிக்கிழமை இந்தச் சுறா சிக்கியது. இதனைத் தண்ணீர் சுறா என மீனவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்த மீனை பார்ப்பதற்கு அப்பகுதியில் இளைஞர்கள் குவிந்தனர். (ஐ)



# உதவியாளராக்கப்பட்ட சி.ஐ.டியின் பணிப்பாளர்

கொழும்பு, நவ. 23

பல முக்கியமான குற்றங்கள் தொடர்பிலான மர்மங்களை துலக்கிய குற்றப் புலனாய்வு அதிகாரியான, குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஷானி அபேசேகர அந்த பதவியில் இருந்து நீக்கப்பட்டு, தெற்கு பிரதிப் பொலிஸ் மா அதிபரின் தனிப்பட்ட உதவியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நீண்டகாலமாக சி.ஐ.டியின் குற்றப் புலனாய்வாளராக கடமையாற்றி வரும் ஷானி அபேசேகர, சி.ஐ.டி. பொறுப்பதிகாரியாக, உதவி பொலிஸ் அத்தியட்சராக, பொலிஸ் அத்தியட்சராக, பிரதிப் பணிப்பாளராகக் கடமையாற்றியிருந்த நிலையில், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சராக தரமுர்த்தப்பட்ட பின்னர் கடந்த 2017 ஆம் அண்டு செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி சி.ஐ.டியின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இவர் லசந்த விக்ரமதுங்க, வசீம் தாஜுதீன்



கொலைகள், பிரகீத் எக்னெலிகொட , 11 பேர் கடத்தப்பட்ட காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களைப் புலனாய்வு செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் மரக்கன்று நடுகை

மன்னார், நவ. 23

மன்னார் நகர சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் மன்னார் நகர சபை பிரிவில் மரம் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட பகுதியில் 250 மரக்கன்றுகள் நாட்டும் வகையில் இந்த நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தலைமன்னார் பிரதானவீதி, மன்னார் பொது மயானத்தில் இதன் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் நகர சபையின் தலைவர் ஞானப்பிரகாசம் அன்ரன் டேவிட்சன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், மன்னார் நகர சபையின் செயலாளர், நகர சபை உப தலைவர், நகர சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நாட்டினர்.

இதேவேளை, மன்னார் நகர சபைக்கு உட்பட்ட பல்வேறு இடங்களிலும் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)




northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545


# இராஜாங்க அமைச்சர்கள் 25ஆம் திகதி பதவியேற்பு

கொழும்பு, நவ. 23

புதிய அரசின் இராஜாங்க அமைச்சர்கள் எதிர்வரும் 25ஆம் திகதி பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் புதிய அமைச்சர்கள் நேற்றுக் காலை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து அங்கு உரையாற்றிய போதே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இராஜாங்க அமைச்சர்கள் தங்களது கடமைகளைச் செய்ய நேற்றுப் பதவியேற்ற அமைச்சர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

கடந்த காலங்களில் இராஜாங்க அமைச்சர்கள் ஓரங்கட்டப்பட்டனர் எனவும், இனியும் அப்படி நடக்கக்கூடாது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (ஐ)

# சச்சினை போன்று அறிமுகமான பாகிஸ்தான் வீரர்!



சச்சினை போன்று 16 வயதிலே, கிரிக்கெட் போட்டியில் அறிமுகமாகியுள்ளார் பாகிஸ்தான் வீரர் நசீம் ஷா.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பிரிஸ்பேனில் நடைபெற்று வருகிறது.

இதில், பாகிஸ்தான் அணியின் அறிமுக வீரராக 16 வயதே ஆன நசீம் ஷா களமிறங்கியுள்ளார். இவர், 145 கிலோமீற்றர் வேகத்தில் பந்துவீசும் திறன் கொண்டவராவார்.

டெஸ்ட் போட்டியில் அறிமுகமான அவருக்கு டெஸ்ட் போட்டிக்கான தொப்பியைப் பயிற்சியாளர் வாக்கர் யூனுஸ் அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

டெஸ்ட் போட்டி தொடங்குவதற்கு முன்னதாக, கடந்த வாரம் ஆஸ்திரேலியாவில் நசீம் ஷா பயிற்சி ஆட்டத்தில் ஆடிக்கொண்டிருந்த போது, அவரது தாயார் உடல்நலக்குறைவு காரணமாக இறந்துபோனார். ஆனால், இறுதிச்சடங்குக்குச் செல்லாமல் தாயார் ஆசைப்படி தொடர்ந்து பயிற்சி ஆட்டத்தில் நசீம் விளையாடினார்.

மிக இளம் வயதில் டெஸ்ட் போட்டிகளில் அறிமுகமான வீரர்களில் நசீம் ஷாவும் ஒருவர். ஒருசில வீரர்கள் மட்டுமே 16 வயதில் அறிமுகமாகி உள்ளனர். இந்தியாவின் சச்சின் டெண் டுல்கர் 16 வயதில் டெஸ்ட் போட்டியில் அறி முகமாகி, பின்னாளில் உலகமே உற்று நோக்கும் கிரிக்கெட் ஜாம்பவானாக உருவெடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஓய்வுக் குறித்து மனம் திறந்தார் ரோஜர் பெடரர்!

ரென்னிஸ் உலகில் அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற பெருமைக்குரிய, சுவிஸ்லாந்தின் ரோஜர் பெடரர், தனது ஓய்வுக் குறித்து மனம் திறந்துள்ளார்.

38 வயதான ரோஜர் பெடரர், தன்னுடைய ஓய்வு குறித்து கூறுகையில், 'என்னுடைய ஓய்வு என்னுடைய உடல்நலனைப் பொறுத்துத்தான் அமையும். தற்போது ஓய்வு பெற வேண்டிய அவசியமில்லை.

35, 36 வயதுக்குப் பிறகு விளையாடமாட்டேன் என நினைத்தேன். ஆனால் இன்று வரை விளையாடி வருகிறேன். நல்ல உடற்தகுதியுடன் விளையாடி வருவதால் எப்போது நிறுத்துவேன் எனக் கணிக்க முடியாது.

2009ஆம் ஆண்டு தொடர்ந்து விளையாடுவது குறித்து கேள்வி எழுப்பினேன். இப்போது 10 வருடங்கள் ஆன பிறகும் விளையாடி வருகிறேன். எப்படி முடியப் போகிறது எனத் தெரியாது. ஓய்வு என்பது உணர்வுபூர்வமாகவும் நல்லவிதமாகவும் இருக்கும் எனக் கூறியுள்ளார்.

ஆண்டில் நடைபெறும் முக்கிய தொடர்களை மட்டும் தேர்வு செய்து விளையாடும் ரோஜர் பெடரருக்கு, இம்முறை சிறப்பான ஆண்டாக அமையவில்லை.

நான்கு முக்கிய கிராண்ட்ஸ்லாம் சம்பியன் பட்டங்களில் இம்முறை, ஆஸ்திரேலியா பகிரங்க ரென்னிஸ் தொடர், பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ் தொடர், அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடர், இந்த மூன்று தொடரிலும் பெரிதும் சோபிக்காத பெடரர், விம்பிள்டன் இறுதிப் போட்டியில் நோவக் ஜோகோவிச்சிடம் தோல்விக் கண்டார்.

ஆனால் அண்மையில் தனது 1500ஆவது



மைல் கல் போட்டியில் விளையாடி வெற்றிக்கண்ட அவர், சுவிஸ் உள்ளரங்க ரென்னிஸ் தொடரில் 10ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்று அசத்தினார்.

இதற்கிடையில், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலகளவில் சிறப்பாக விளையாடும் 24 அணிகள் பங்கேற்கும் ஏ.டி.பி கிண்ண ரென்னிஸ் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

இதேவேளை, அண்மையில் அடுத்த ஆண்டு ஜப்பானில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் தொடரிலும், பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ் தொடரிலும் விளையாடுவதற்கு ரோஜர் பெடரர் விருப்பம் தெரிவித்தார் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

ரோஜர் பெடரர், இதுவரை 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார். இதில் ஆறு ஆஸ்திரேலிய பகிரங்க சம்பியன் பட்டங்கள், ஒரு பிரான்ஸ் பகிரங்க சம்பியன் பட்டம், எட்டு விம்பிள்டன் சம்பியன் பட்டங்கள், ஐந்து அமெரிக்க பகிரங்க சம்பியன் பட்டங்கள் அடங்கும்.

103 பட்டங்களைப் பெற்றுள்ளார் ரோஜர் பெடரர். 2018 ஜனவரியில் கடைசியாக கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றார். ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் தொடருக்கு பிறகு ஏழு ஏ.டி.பி சம்பியன் பட்டங்களை வென்றுள்ளார். (ஐ)

# இந்தியா அணி அறிவிப்பு!

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான ஒருநாள் மற்றும் ரி- 20 தொடருக்கான இந்தியா அணி, அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்திய தீவுகள் அணி, அடுத்த மாதம் இந்தியாவிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஒருநாள் மற்றும் ரி – 20 தொடர்களில் விளையாடவுள்ளது.

இந்தநிலையில், இந்தத் தொடர்களுக்கான மாற்றம் கலந்த இந்தியா அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ரி – 20 அணியை பொறுத்தவரை சமீபகாலமாக ஓய்வில் இருந்த சுழற்பந்து வீச்சாளர் குல்தீப் யாதவ் மீண்டும் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

அதேபோல, உபாதையிலிருந்து மீண்டுள்ள வேகப்பந்து வீச்சாளர் புவனேஸ்வர் குமார், மீண்டும் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

மேலும், மற்றொரு வேகப்பந்து வீச்சாளரான மொஹமட் ஷமியும் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இதுதவிர பங்களாதேஷ் அணிக்கெதிரான தொடரில் இடம்பெறாமல் இருந்த சகலதுறை வீரர் ரவீந்திர ஜடேஜா, மீண்டும் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

ரி – 20 அணியில் சகலதுறை வீரரான தமிழகத்தின் வொஷிங்டன் சுந்தர், அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இத்தொடரில், துணைத் தலைவர் ரோஹித் சர்மாவுக்கு ஓய்வு கொடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவர் அணியில் இடம் பிடித்துள்ளார்.

பங்களாதேஷ் தொடருக்கான அணியில் சேர்க்கப்பட்டிருந்த சஞ்சு சாம்சன் நீக்கப்பட்டுள்ளார். அதேபோல் குருணால் பாண்ட்யாவும் நீக்கப்பட்டுள்ளார்.

வேகப்பந்து வீச்சு சகலதுறை வீரரான ஷிவம் டுபே இரண்டு தொடர்களுக்கான அணியிலும் இடம் பிடித்துள்ளார்.

இறுதித் தொடர்களில் இடம்பெற்றிருந்த கலீல் அஹமட் மற்றும் நவ்தீப் சைனி ஆகியோர் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

**ரி - 20 அணியின் விவரம் -**

விராட் கோஹ்லி தலைமையிலான அணியில், ரோஹித் சர்மா, ஷிகர் தவான், கே.எல்.ராகுல், ஸ்ரேயஸ் ஐயர், மனிஷ் பாண்டே, ரிஷப் பந்த், ஷிவம் டுபே, வொஷிங்டன் சுந்தர், ரவீந்திர ஜடேஜா, யுஸ்வேந்திர சஹால், குல்தீப் யாதவ், தீபக் சஹார், மொஹமட் மி, புவனேஸ்வர் குமார் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.



**ஒருநாள் அணி விவரம்-**

விராட் கோஹ்லி தலைமையிலான அணியில், ரோஹித் சர்மா, ஷிகர் தவான், கே.எல்.ராகுல், ஸ்ரேயஸ் ஐயர், மனிஷ் பாண்டே, ரிஷப் பந்த், ஷிவம் டுபே, கேதர் ஜாதவ், ரவீந்திர ஜடேஜா, யுஸ்வேந்திர சஹால், குல்தீப் யாதவ், தீபக் சஹார், மொஹமட் ஷமி, புவனேஸ்வர் குமார் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இரு அணிகளுக்கிடையில் முதலாவதாக நடைபெறும் மூன்று போட்டிகள் கொண்ட ரி – 20 கிரிக்கெட் தொடர், எதிர்வரும் மாதம் 6ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதன்முதல் போட்டி, எதிர்வரும் 6ஆம் திகதி மும்பை – வாங்கடே மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து, இரு அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெறவுள்ளது. இத்தொடர், எதிர்வரும் மாதம் 15ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை நடைபெறும்.

# பாகிஸ்தானுக்கு எதிராக வலுவான இலங்கை அணி



பாகிஸ்தான் சுற்றுப்பணத்திற்கான அனுபவமிக்க மற்றும் வலுவான 16 பேர் அடங்கிய டெஸ்ட் அணியை இலங்கை அறிவித்துள்ளது.

பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ள இலங்கை அணி ஐசிசி டெஸ்ட் சாம்பியன்ஷிப்பின் ஒரு பகுதியாக இருக்கும் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

ராவல்பிண்டி (டிசெம்பர் 11 – 15) மற்றும் கராச்சி (டிசெம்பர் 19 – 23) ஆகிய இடங்களில் டெஸ்ட் போட்டிகள் நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளது.

பாகிஸ்தான் சுற்றுப்பயணத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 16 வீரர்களும் குறைந்தபட்சம் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடியவர்கள் ஆவர்.

பட்டியலில் ஓஷாடா பெர்னாண்டோ இரண்டு டெஸ்ட் போட்டிகளுடன் குறைந்த அனுபவம் வாய்ந்தவர், தொடரின் போது அணித்தலைவர் திமுத் கருணரத்னேவுடன் புதிய டெஸ்ட் தொடக்க ஆட்டக்காரராக களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேசமயம், தினேஷ் சண்டிமால் டெஸ்ட் அணிக்கு திரும்பியுள்ளார்.

இலங்கையின் புதிய விளையாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள 60 வயதான டலஸ் அழகப்பெரும, முதல் பணியாக பாகிஸ்தான் சுற்றுப்பயணத்திற்கான 16 வீரர்கள் அடங்கிய டெஸ்ட் அணியை அங்கீகரித்தார்.

அணி விவரம்:

திமுத் கருணரத்னே(அணித்தலைவர்)
ஓஷாடா பெர்னாண்டோ
குசால் மெண்டிஸ்
ஏஞ்சலோ மத்தியூஸ்
தினேஷ் சண்டிமால்
தனஞ்சய டி சில்வா
நிரோஷன் டிக்வெல்ல
தில்ருவன் பெரேரா
லசித் எம்புல்டெனியா
சுரங்கா லக்மல்
விஷ்வா பெர்னாண்டோ
கசுன் ராஜித
லஹிரு குமாரா
லக்ஷன் சண்டகன்
குசால் பெரேரா
லஹிரு திரிமன்னே

# எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சஜித்துக்கு விட்டுக் கொடுங்கள்!

## ரணிலிடம் சம்பந்தன் கோரிக்கை




கொழும்பு, நவ. 23

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சஜித் பிரேமதாஸவுக்கு விட்டுக்கொடுக்குமாறு முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் சம்பந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரை நியமிப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கல் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து இரா.சம்பந்தன் மேலும் தெரிவிக்கையில் –

சஜித் பிரமேதாஸ, மக்களின் 55 இலட்சம் வாக்குகளைப் பெற்ற இளம் தலைவர். எனவே முன்னாள் பிரமதர் ரணில் விக்கிரமசிங்க, சஜித்துக்கு வழி விட்டு அவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்குவதற்கு இடமளிக்க வேண்டும். அதுவே ஜனநாயக மரபாகும்.

நாம் யாரையும் ஆழமாக ஆதரிக்க வில்லை. தேர்தலில் நின்ற இரு பகுதியினருடனும் தொடர்புகளை வைத்திருந்தோம்.

மேலும் எமது எதிர்கால நிலைப்பாடு குறித்து, ஜனநாயக ரீதியான முடிவுகளை நாம் எடுக்கவுள்ளோம். எமது மக்களைப் பொறுத்தளவில் நடந்து முடிந்தத் தேர்தலில் ஒற்றுமையாக வாக்களித்துள்ளனர். அவர்களிடத்தில் ஒற்றுமை மேம்பட்டதைத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

எனவே எதிர்காலத்திலும் மக்கள் ஓரணியாக நின்று செயற்படவேண்டும் – என்றார். (ஐ)

# ரணில் பதவி விலகக் கோரி ஆதரவாளர் உண்ணாவிரதம்



கொழும்பு, நவ. 23

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவை விலகக் கோரி கட்சித் தலைமையகமான சிறிகொத்தா முன் கட்சி ஆதரவாளர் ஒருவர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். நேற்றுக் காலை முதல் அவர் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். (ஐ)

# பொதுத் தேர்தலிலும் மொட்டுடன் இணைந்து பயணிக்கின்றது சு.க.

கொழும்பு, நவ. 23

எதிர்வரும் பொதுத் தேர்தலிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்லில் பெற்ற முன்னேற்றம் மற்றும் கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப் பட்டுள்ளது.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசி உள்ளிட்ட மேலும் சில பிரதேச சபை உறுப்பினர்களைக் கட்சியில் இருந்து நீக்குவதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத் தக்கது. (ஐ)




## இராணுவத்தைக் களமிறக்கி எமக்கு பாதுகாப்பு தாருங்கள்

# கோட்டாவுக்கு கேகாலை தமிழ் மக்கள் கடிதம்

கொழும்பு, நவ. 23

ஜனாதிபதித் தேர்தல் தினத்தன்று கேகாலை மாவட்டம் தெரனியகல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நூரி தோட்டத்தில் தாக்குதல் மேற்கொண்டவர்களால் தொடர்ந்தும் அச்சுறுத்தல் நிலவுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

தமக்குரிய பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை அவர்கள் அனுப்பி வைத்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கச் சென்று திரும்பிக்கெண்டிருந்த ஆர்.பிரகாஷ் என்பவர் போத்தலால் குத்தப்பட்டுக் கையில் காயப்படுத்தப்பட்டார். சில வீடுகளும் சேதப்படுத்தப்பட்டிருந்தன.காயமடைந்த பிரகாஷ் தற்போது வீடு திரும்பியிருக்கிறார்.

தாக்குதலை நடத்திய ஆறுபேர் கைதாகி, நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். இந்த வழக்கு எதிர்வரும் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.


இந் நிலையில் பிணையில் விடுதலை செய்யப்பட்டவர்கள் மீண்டும் இந்த மக்களின் நாளாந்தம் செயற்பாடுகளுக்கு அச்சுறுத்தலாகவும் இடையூறாகவும் இருந்து வருகின்றமையால் மக்கள் அச்சத்தில் உள்ளனர். இந்த விடயம் குறித்து பொலிஸாருக்கும் புகார் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் அடிக்கடி இவ்வாறான சமூக, இன முரண்பாடு அண்மைக் காலமாக நடந்து வருகின்றன. இதனை இல்லாது ஒழிக்கவும் பாதுகாப்பை உறுதி செய்யவும், கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்த சமயத்தில் இராணுவ முகாம் நிறுவப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருந்தது.

கடந்த அரசு அதனை அகற்றியதாலேயே இந்தப் பிரச்சினை தோன்றியதாக குற்றம்சுமத்தும் மக்கள், மீண்டும் அந்த இராணுவ முகாமை அமைக்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் தற்போது ஜனாதிபதியாக உள்ள அதே கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி உள்ளனர். (ஐ)

# ஒன்றரை மாதத்தில் 1,557 பேருக்கு யாழ். மாவட்டத்தில் டெங்குநோய்



யாழ்ப்பாணம், நவ. 23

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஒன்றரை மாதத்தில் மட்டும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட 2 பேர் உயிரிழந்துள்ளமையுடன், 1557 பேர் பாதிக்கப்பட்டுள்ளார் கள் என்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை தகவல் வெளியிட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் வழமை போன்று மழை காலம் ஆரம்பமானதைத் தொடர்ந்து டெங்கு நோய்த் தாக்கம் இம்முறையும் அதிகரித்துள்ளது.

இவ் வருடத்தில் இதுவரை யாழ். மாவட்டத்தில் மட்டும் டெங்கு நோயாளர்கள் 3,854 பேர் இனம் காணப்பட்டமையுடன் கடந்த ஒக்ரோபர் மாதம் 537 பேரும் இம்மாதம் நடுப்பகுதிவரை 1020 பேரும் இனம் காணப்பட்டனர்.

டெங்கு நோய் தொடர்பில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கமைய மாவட்டத்திலுள்ள பிரதேச சுகாதாரப் பணிமனைகளுக்கும் டெங்கு நோய் முன்னெச்சரிக்கை தொடர்பில் சகல அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் பொதுமக்கள் அனைவரும் டெங்கு நோய் தொடர்பில் முன்னெச்சரிக்கையுடன் இருப்பதுடன் சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தல்களை உரிய முறையில் பின்பற்றுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது. (ஐ)

# சஜித்தின் தோல்விக்கு நான் காரணமல்லன்!

## ரணில் நேற்று அடியோடு மறுப்பு

கொழும்பு, நவ. 23

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவின் வேலைத்திட்டம் தடைப்பட்டமை தொடர்பாக தன்மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க மறுத்துள்ளார்.

சிறிகொத்தாவில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

எனது யோசனையின் பிரகாரமே ஜனாதிபதித் தேர்தலில் எமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ நிறுத்தப்பட்டார்.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவின் வேலைத்திட்டம் தடைப்பட்டமைக்கு நான் தான் காரணம் எனக் கூறுவதில் எந்ததொரு உண்மையும் இல்லை.

அதாவது அவரை வெற்றியடையச் செய்வதற்காக ஏனைய கட்சிகளின் ஆதரவைத் திரட்டிக்கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் பிரசாரத்தை நாமே முன்னெடுத்தோம்.

அத்துடன் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் முக்கியஸ்தர்களென ஒவ்வொருவருக்கும் முக்கிய பொறுப்புக்களை ஒதுக்கிக் கொடுத்தோம்.

அதனடிப்படையில் எனக்கு, வடக்கு – கிழக்கில் தேர்தல் பணிகளை முன்னெடுப்பதற்கு வாய்ப்பு கிடைத்தது. அதற்கமைய அப்பகுதியில் அதிக சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்தோம்.



ஆனால் தெற்குப் பகுதியில் மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ள முடியாமல் போனமையே தோல்விக்குக் காரணம்.

எமது கட்சியில் சிங்கள – பௌத்த அடிப்படை இழக்கப்படுவது குறித்து நாங்கள் முதலில் அவதானம் செலுத்தவேண்டும். இதற்கு முன்னர் இவ்வாறான ஒன்று இடம்பெற்றிருக்கவில்லை.

இது தொடர்பாக நாங்கள் விசேடமாக தேடிப்பார்க்க வேண்டும். அதன் ஊடாக, எதிர்கால தீர்மானங்களை எடுப்பதுடன் பகுப்பாய்வும் மேற்கொள்ளப்படவேண்டும்.

தேர்தல் தோல்வி குறித்து யாரை நோக்கியும் விரல் நீட்டுவதை விடுத்து, தோல்விக்கான காரணங்களைப் பகுப்பாய்வு செய்து நாங்கள் முன்னோக்கிச் செல்லவேண்டும் – என்றார். (ஐ)

## சபாநாயகராக வாசுதேவ?

கொழும்பு, நவ. 23

புதிய சபாநாயகராக வாசுதேவ நாணயக்கார நியமிக்கப்படவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



கடந்த 16ஆம் திகதிநடைபெற்றஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற கோட்டாபய ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். புதிய பிரதமராக மஹிந்த பதவியேற்றுள்ளார்.

இதனை அடுத்து 15 பேர் கொண்ட புதிய அமைச்சரவை நேற்றுப் பதவியேற்றுக்கொண்டது.

இந்தநிலையில் தற்போது சபாநாயகர் பதவியிலும் மாற்றம் செய்ய ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது. இந்தப் பதவிக்கு வாசுதேவ நாணயக்கார நியமிக்கப்படவுள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

## சு.கவுக்கு புதிய அமைப்பாளர்கள்

கொழும்பு, நவ. 23

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குப் புதிய அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

கட்சியின் பதில் தலைவர் ரோஹன லக்ஷ்மன் பியதாஸ இதனைத் தெரிவித்தார்.


ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் சுகததாஸ அரங்கில் கூட்டம் ஒன்று இடம்பெற்றிருந்தது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் கட்சியில் இருந்து நீக்கப்பட்டனர்.

இந்தநிலையிலேயே அந்த வெற்றிடங்களுக்கு புதிய அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர் எனக் கட்சியின் பதில் தலைவர் ரோஹன லக்ஷ்மன் பியதாஸ குறிப்பிட்டார்.

நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின்போது இது தொடர்பாக இறுதி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.11.2019 இல் வெளியிடப்பெற்றது.